Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

THURSDAY, OCTOBER 6, 2022

வியாழக்கிழமை 06, ஒக்டோபர் 2022 | ஒளி: 08 கதிர் 115 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



'அதிகாரிகளை அனுப்பு ; 'அதிகாரிகளை அனுப்பாதே

# ஏட்டிக்குப்போட்டி

முல்லைத்தீவில் மீனவர்கள் இரு தரப்பாகப் போராட்டம்

(நான்காம் பக்கம் பார்க்க)

முழுச் செய்தி P4



# 12.5 கிலோவுக்கு ரூ.271 குறைத்தது லிட்ரோ

12.5 கிலோகிராம் நிறையுடைய எரிவாயு சிலிண்டரின் விலை 271 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளதாகவும், 5 மற்றும் 2.3 கிலோ சிலிண்டர்களின் விலைகளும் முறையே 107 மற்றும் 48 ரூபாய்களால் குறைக்கப்பட்டுள்ளதாகவும் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், நேற்று (05) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# தொலைத்தொடர்பு சேவை கட்டணங்களும் உயர்வு

இலங்கையிலுள்ள அனைத்து தொலைத்தொடர்பு நிறுவனங்களும், நேற்று (05) நள்ளிரவு முதல் தங்களது சேவைக் கட்டணங்கள் உயர்த்தியுள்ளதாக அறிவித்துள்ளன. கடந்த 1ஆம் திகதி முதல் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி அமுல்படுத்தப்பட்ட காரணத்தினால் இந்த உயர்வு ஏற்பட்டுள்ளதாக தொலைத்தொடர்பு நிறுவனங்கள் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளன.

தொடர்ச்சி P2



இலங்கைக்கெதிரான தீர்மானம் மீது

# இன்று வாக்கெடுப்பு

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானம் மீதான வாக்கெடுப்பு இன்று (6) இடம்பெறவுள்ளது. அத்துடன் இம்முறை இலங்கை தொடர்பான வாக்கெடுப்பில் இலங்கைக்கு மிக்க குறைந்த ஆதரவே கிடைக்கும் சாத்தியப்பாடுகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், இலங்கை தொடர்பான தீர்மானத்தின் இறுதி நகல்வடிவமும் மனித உரிமை பேரவையின் அமர்வில் நேற்று (5) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பிரச்சினைகள் ஒன்றும் புதிதல்ல

### ஐ.நா.வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

2012 ஆம் ஆண்டு தொடக்கம் ஜெனிவாவில் அழுத்தங்களுக்கு முகம்கொடுத்து வருவதாக தெரிவித்த ஐ.நா. வுக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதி சி.ஏ. சந்திரபிரேம, அன்று தொடக்கம் இந்த ஆண்டு வரை, இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்படும்

## இலங்கைக்கு பின்னடைவு ஏற்படும்

### எதிர்க்கட்சி தெரிவிப்பு

■ பா.நிரோஸ்

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான வாக்கெடுப்பு இன்று (06) நடைபெறுவதை சுட்டிக்காட்டிய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், இந்த வாக்கெடுப்பில் இலங்கைக்கு பின்னடைவே ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

வாக்கெடுப்பில் தோற்றாலும்

## பிரேரணையுடன் ஒருபோதும் இணங்கப்போவதில்லை

■ மஹேஸ்வரி விஜயனந்தன்

இம்முறை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பில் நடத்தப்படும் வாக்கெடுப்பில் இலங்கைக்கு மிக்க குறைவான ஆதரவே கிடைக்கும், அதற்கான இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையுடன் ஒருபோதும் இணங்கப்போவதில்லை என வெளிவிவகாரத்துறை அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இலங்கை மீதான வாக்கெடுப்பில் பலமிக்க பிரித்தானியா, கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளுடன் மோத முடியாது எனத்



தொடர்ச்சி P2



# வசந்த முதலிகே கொல்லப்படலாம்

### சபையில் எச்சரித்தார் சஜித்

"வசந்த முதலிகே தப்பிச் செல்ல முயற்சித்ததாகக் கூறி அவர் கொலை செய்யப்படலாம் ..

■ பா.நிரோஸ்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே இரவு நேரங்களில் பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக தெரிவித்த எதிர்க்கட்சி

தொடர்ச்சி P2



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

## விசாரணைகளை நிறைவு செய்தது உயர் நீதிமன்றம்

### உரிய காலத்துக்குள் உயர்நீதிமன்றின் தீர்ப்பு

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமானவர்களைத் தண்டிக்க உத்தரவிடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட 13 அடிப்படை உரிமைகள் மீறல் மனுக்கள் தொடர்பான விசாரணைகளை நிறைவுசெய்த உயர்நீதிமன்றம்,

தொடர்ச்சி P2

## நீதிமன்ற அவமதிப்புக்காக ஏன் தண்டிக்கப்படக் கூடாது?

### காரணத்தை விளக்க சனத் நிஷாந்தவுக்கு அழைப்பாணை

நீதிமன்றத்தை அவமதித்தமைக்காக தான் ஏன் தண்டிக்கப்படக் கூடாது என்ற காரணத்தை விளக்குவதற்காக எதிர்வரும் 13ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு, நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம், நேற்று (05) அழைப்பாணை பிறப்பித்தது.

நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் மற்றும் நீதவான்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான இலங்கை நீதிச் சேவை சங்கம் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு மனுவின் அடிப்படையில் மேன்முறையீட்டு நீதிமன்றம் மேற்குறிப்பிட்ட உத்தரவை பிறப்பித்தது.

இதேவேளை, சட்டத்தரணி பிரியலால் சிறிசேன மற்றும் பொலன்னறுவை சட்டத்தரணிகள் சங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சட்டத்தரணி விஜித குமார ஆகியோரால் இராஜாங்க

தொடர்ச்சி P2

பல்கலைக்கழகங்களில்

## பாசிசம், அடிப்படைவாதம் பரப்பப்படுகின்றது

■ பா.நிரோஸ்



பல்கலைக்கழகங்களுக்குள் மாணவர் அமைப்புகள் பாசிசத்தையும், அடிப்படைவாதத்தையும் கொண்டு சேர்ப்பதாக தெரிவித்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன், குண்டர்கள்,

தொடர்ச்சி P2

குறுந்தூர்மலை விவகாரத்தில்

## இராணுவமும் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளது



■ பா.நிரோஸ்

தொல்பொருள் திணைக்களம் என்பது இலங்கையில் உள்ள இனவாதத் திணைக்களம் என சபையில் தெரிவித்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

தொடர்ச்சி P2

மனித உரிமைகள் பேரவை

## அனைத்திலும் தலையிடுகிறது



■ மஹேஸ்வரி விஜயனந்தன்

இலங்கை விடயத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையானது, தேவையான விடயங்கள், தேவையற்ற விடயங்களென அனைத்திலும் தலையிடுவதாகத் தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இதற்காகத்தான் நாம் எதிர்ப்பு தெரிவிக்கின்றோமே தவிர பொருளாதார மறுசீரமைப்பை முன்னெடுக்க மாட்டோம் என நாம் தெரிவிக்கவில்லை என்றார்.

இணையவழி ஊடாக ஜெனீவாவிலிருந்து நேற்று (5) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி மாளிகை சேதம்: அடுத்த வாரம் அறிக்கை

ஜனாதிபதி மாளிகையில் போராட்டக்காரர்களால் சேதப்படுத்தப்பட்ட சொத்து விவரங்கள் குறித்து, தொல்பொருள் திணைக்களம் நடத்திய விசாரணையின் இறுதி அறிக்கை, ஜனாதிபதி செயலாளரிடம் அடுத்த வாரம் கையளிக்கப்படும் என்று தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மனதுங்க தெரிவித்தார்.

குறித்த அறிக்கை, தற்போது தயாரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், ஜனாதிபதி மாளிகையில் சேதப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பான

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இன்று வாக்கெடுப்பு

கடந்த செப்டெம்பர் 12 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், மனித உரிமைகளுக்கான பதில் உயர்ஸ்தானிகர் நடா அல் நஷிப் இலங்கை தொடர்பான அறிக்கையை சமர்பித்திருந்தார். இதன்போது இலங்கையின் நிலைமை மிகவும் பலவீனமாக இருப்பதாகவும், மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக் கூற வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியிருந்துடன், இலங்கையின் புதிய அரசாங்கம், மனித உரிமைகள் மற்றும், நல்லிணக்கம் என்பவற்றை மேம்படுத்துவதற்கென ஒரு தேசிய உரையாடலை ஆரம்பிக்க வேண்டுமெனவும் , கடந்த காலத்தில் இடம்பெற்ற அத்துமீறல்கள் மீண்டும் இடம்பெறுவதனைத் தடுக்கும் பொருட்டு பொறுப்புக் கூறல் மற்றும் விரிவான நிறுவனரீதியிலான சீர்திருத்தங்கள் என்பன மேற்கொள்ளப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியிருந்தார்

அதேபோல் இலங்கை தொடர்பான விவாதத்தின் போதும் இலங்கைக்கு ஆதரவாக ஒரு சில நாடுகள் குரல் கொடுத்திருந்த போதிலும், இலங்கையின் மனித உரிமை மீறல்கள், வாக்குறுதி மீறல்கள் மற்றும் அரசியல் ரீதியிலான நீண்டகால முரண்பாடுகள் என்பவற்றை சுட்டிக்காட்டி இந்தியா, அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள், ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகள் இலங்கைக்கு எதிரான நிலைப்பாட்டினை எடுத்திருந்தன.

இந்நிலையில், இலங்கை தொடர்பான தீர்மானத்தின் இறுதி நகல்வடிவமும் மனித உரிமை பேரவையின் அமர்வில் நேற்று (5) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய இராச்சியம் தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் , ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான இறுதி வரைவை முன்வைத்துள்ளன.குறிப்பாக 30 நாடுகளின் இணை அனுசரணையுடன் ஐக்கிய இராச்சியம், அமெரிக்கா, கனடா, ஜேர்மனி, மலாவி,மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் இணைந்து இந்த வரைவை முன்வைத்துள்ளன.

19 அம்ச தீர்மானமாக முன்வைக்கப்பட்டுள்ள இந்த தீர்மானத்தில் இலங்கையில் மனித உரிமைகள் மற்றும் உண்மை, நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் செயற்பாடுகளை பாராட்டி இந்த வரைவு தீர்மானம், 19 விடயங்களை உள்ளடக்கியுள்ளது. மனித உரிமைகள் பேரவையின் 53 ஆவது மற்றும் 55 ஆவது அமர்வுகளில் ஒரு வாய்வழி புதுப்பிப்பு மற்றும் அதன் 54 ஆவது அமர்வில் எழுத்துப்பூர்வ புதுப்பிப்பு மற்றும் அதன் 57 ஆவது அமர்வில் பொறுப்புக்கூறலை முன்னெடுப்பதற்கான கூடுதல் விருப்பங்களை உள்ளடக்கிய ஒரு விரிவான அறிக்கை மற்றும் ஊடாடும் உரையாடலையும், முக்கிய நாடுகளின் தீர்மானம் கோரியுள்ளது.

# பிரச்சினைகள் ஒன்றும் புதிதல்ல

எதிராக முன்வைக்கப்படும் யோசனைகளுக்கு கிடைத்துவரும் ஆதரவுகள் குறைந்து வருகின்றன என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இணையவழி ஊடாக ஜெனீவாவிலிருந்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து தெரிவித்த அவர்,

கடந்த 2012ஆம் ஆண்டு இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்ட யோசனைக்கு இலங்கைக்கு ஆதரவாக கிடைக்கும் வாக்குகளை விட, அந்த யோசனையைக் கொண்டு வரும் தரப்பினருக்கு கிடைக்கும் வாக்குகளும் குறைவடைந்துள்ளன. 2012இல் இலங்கைக்கு எதிராக 24 வாக்குகளும் 2013இல் 25 வாக்குகளும் 2014இல் 23ஆக குறைவடைந்ததுடன், கடந்தாண்டு 22ஆக குறைவடைந்துள்ளது. 47 நாடுகளைக் கொண்ட ஜெனீவா மனித உரிமைகள் பேரவையில் ஒருசில நாடுகள் மாத்திரமே இலங்கைக்கு எதிராக செயற்படுகின்றன.

கடந்த வருடம் பெப்ரவரி மாதம் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர், இலங்கை தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டார். அது தொடர்பில் ஏனைய நாடுகளுடன் கலந்துரையாடப்பட்ட போது 22 நாடுகள் எமக்கு ஆதரவாக செயற்பட்டன. இந்த வருடம் மார்ச் மாதம் இதேபோன்ற ஒரு கலந்துரையாடலில் 36 நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக குரல் எழுப்பின. செப்டெம்பர் மாதமும் இலங்கைக்கு எதிரான யோசனை முன்வைக்கப்பட்டு அது தொடர்பில் கலந்துரையாடப்பட்ட போது, 43 நாடுகள் செயற்பட்டன. எமக்கு ஆதரவாக கதைத்தன.

எனவே எண்ணிக்கையின் அடிப்படையில் ஜெனீவாவில் இடம்பெறும் நிகழ்வுகளை பார்க்க முடியாது என்பது தனது தனிப்பட்ட கருத்து என தெரிவித்த அவர், இலங்கையின் தேசியத் தன்மை பாதுகாக்கப்பட்டதா இல்லையா என்பது குறித்தே பார்க்க வேண்டும் என்றார்.

# இலங்கைக்கு பின்னடைவு ஏற்படும்

உலக நாடுகள் அனைத்தும் இலங்கை தொடர்பில் அவதானம் செலுத்தியுள்ளது. ஜனநாயக நாடுகளுக்கு மத்தியில் இலங்கையை தனிமைப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்கக்கூடாது எனவும் தெரிவித்தார். ஜனநாயகத்துக்கு சவால் விடும் செயற்பாடுகளை அரசாங்கம் கைவிட்டு, நாட்டு மக்களை மேலும் நெருக்கடி நிலைக்கு தள்ள வேண்டாம் எனவும் கூறினார்.

# அனைத்திலும் தலையிடுகிறது

பொருளாதாரம் குற்றமொன்று இடம்பெற்றிருந்தால் இலங்கையின் சட்டதிட்டங்களுக்கு அமைய, அக்குற்றத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். பொருளாதார மறுசீரமைப்பு என்பது நாட்டில் ஏற்பட வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் அந்த மறுசீரமைப்பை முன்னெடுக்க மனித உரிமைகள் பேரவையிடம் நிபுணத்துவம் உள்ளதா அல்லது அவர்களிடம் பொருளாதார விசேட நிபுணர்கள் இருக்கின்றனரா? என்பதே எமது கேள்வியாகும். பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பான நிபுணத்துவம் சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி என்பவற்றிடம் உள்ளது. அவர்களுடன் இணைந்து நாம் பொருளாதார மறுசீரமைப்பு முன்னெடுத்து வருகின்றோம்.

அதனால் மனித உரிமைகள் பேரவையானது, மனித உரிமைகளுடன் தொடர்புடைய விடயங்களை மாத்திரம் முன்னெடுக்க வேண்டும். அவர்களிடம் அது தொடர்பான விடயத்திலிருந்து விடுபட முடியாமல் இருப்பதற்காக காலம் பூராகவும் எம்மை இதில் பிடித்த வைத்திருப்பதற்கான பாரிய வலைகள் விரிக்கப்பட்டுள்ளன. ஆகவே எமக்கு எதிரான பிரச்சினை இப்போது முடியாது. இப்படியே சென்றால் இன்னும் சில நாட்களில் இலங்கை கிரிக்கெட் அணியில் ஏதாவது பிரச்சினை இருக்கிறது என கூறி அது தொடர்பிலும் விசாரிக்க எம்மை அழைப்பார்கள். எனவே நாம், கொள்கை ரீதியில் அவற்றை எதிர்க்கின்றோமே தவிர பொருளாதார மறுசீரமைப்புக்கு எவ்வித எதிர்ப்பும் இல்லை. பொருளாதார மறுசீரமைப்பானது, அதனுடன் நிபுணத்துவம் உடையவர்களுடன் இணைந்து முன்னெடுத்து வருகின்றோம் என்றார்.

# பிரேரணையுடன் ஒருபோதும் இணங்கப்போவதில்லை

தெரிவித்த அமைச்சர், வாக்களிப்பு முடிவுகள் எதுவாக அமைந்தாலும் மனித உரிமைகள் பேரவையின் புதிய யோசனைக்கு எதிராக இலங்கை உறுதியாக நிற்கும் என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தின் ஏற்பாட்டில், இணையவழி ஊடாக ஜெனீவாவிலிருந்து நடாத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய பொறிமுறையின் கீழ் இலங்கை ஜெனீவா அமர்வில் பதிலளிக்க முயன்றாலும் அது திருப்தியடையும் வகையில் இல்லை.பிரித்தானியா, கனடா, அமெரிக்கா மற்றும் ஜெர்மனி உள்ளிட்ட குழு எங்களுக்கு எதிராக ஒரு புதிய தீர்மானத்தை முன்வைத்துள்ளன. அதில் 8வது பத்தியை நாங்கள் முற்றிலும் எதிர்த்தோம். அதுதான் மிகவும் ஆபத்தான பகுதியாகும். அது பாதிக்கப்பட்டவர்களுக்காக நிற்கவும், ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் உட்பட நீதித்துறை மற்றும் பிற செயல்முறைகளை ஆதரிப்பதாகவும் கூறுகிறது.

இதன் அர்த்தம், அவர்கள் சொல்வது போல், மனிதாபிமான நடவடிக்கையின் போது இலங்கையில் நடந்த சில விடயங்கள் தொடர்பாக, அவர்கள் இலங்கையில் நீதித்துறை நடவடிக்கைகளுக்கு வெளியே சென்று வெளிநாடுகளில் வழக்கு தொடரவும் எமது இராணுவ வீரர்களை சர்வதேச நீதிமன்றம் அல்லது சர்வதேச நீதிபதிகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடாகும். எனவே, இந்த செயற்பாடு என்பது இலங்கையின் அரசியலமைப்புக்கு முற்றிலும் எதிரானது என்பதுடன், இதற்கு எம்மால் இணங்க முடியாது என்றார்.

> **அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் உண்மையைக் கண்டறிவதற்கான உள்ளக பொறிமுறை ஒன்றினை உருவாக்க அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது,**

சுயாதீன பொறிமுறையை நாட்டுக்குள் நடைமுறைப்படுத்துவது அவசியம் என தெரிவித்துள்ள அவர், அது உண்மையைக் கண்டறிவதற்கான உள்ளக பொறிமுறையாக அமைய வேண்டும் என்றார். அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் இது குறித்த பொறிமுறை ஒன்றினை உருவாக்க அரசாங்கம் முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றது, உயர்நீதிமன்ற நீதியரசர் நவாஸின் தலைமையில் குழு இது தொடர்பில் ஆராய்ந்து சமர்பிக்கவுள்ள அறிக்கையை எதிர்பார்ப்பதாகவும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இவ்வாறான பொறிமுறை அவசியம் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம் எனவும் தெரிவித்தார்.

# நீதிமன்ற அவமதிப்புக்காக ஏன் தண்டிக்கப்படக் கூடாது?

அமைச்சருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுக்கள் தொடர்பிலும், ஒக்டோபர் 13ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறு, அவருக்கு கடந்த 29ஆம் திகதி அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டது.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டின் பேரில் பிரதிவாதிக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவதற்கு சட்டமா அதிபருக்கு உத்தரவிடுமாறும், சம்பந்தப்பட்ட எம்.பியை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கோரியுள்ளனர்.

# இராணுவமும் நீதிமன்ற உத்தரவை மீறியுள்ளது

குறுந்தூர்மலை விவகாரத்தில் இராணுவமும் நீதிமன்ற உத்தரவை மீறியதாகவும் குற்றஞ்சாட்டினார்.

குறுந்தூர்மலை தமிழர்கள் வழிபடும் புராதான இடமாக இருக்கிறது. எனினும் இதனை தொல்பொருள் திணைக்களம் அபகரிக்கப் பார்த்தது. குறுந்தூர்மலை ஒரு தொல்பொருள் இடமென்றால், அதனைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு மாறாக அதில் எவ்வாறு பௌத்த விஹாரையை அமைக்க முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

தொல்பொருள் திணைக்களம் என்பது இலங்கையில் உள்ள இனவாதத் திணைக்களம் என்றே கூறுவேன். குறுந்தூர்மலை விவகாரத்தில் நீதிமன்றம் தடை உத்தரவு பிறப்பித்துள்ளபோதிலும், இராணுவமும் இந்த விவகாரத்தில் நீதிமன்ற உத்தரவை மீறியிருப்பதாகவும் கூறினார்.

# 12.5 கிலோவுக்கு ரூ.271 குறைத்தது லிட்ரோ

நேற்று (05) நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில், குறித்த விலைத்திருத்தம் அமுலாகும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலக சந்தையில் எரிவாயு விலை குறைவடைந்துள்ளமை மற்றும் எரிவாயுச் சூத்திரத்துக்கமை லிட்ரோ எரிவாயு விலைகள் குறைக்கப்படும் என்று நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், முன்னர் அறிவித்திருந்தார். அதற்கமைய, 4,551 ரூபாயாக இருந்த 12.5 கிலோ கிலோகிராம் சிலிண்டரின் விலை 271 ரூபாயால் குறைக்கப்பட்டு, 4,280 ரூபாயாக குறைவடைந்தது.

1,827 ரூபாயாக இருந்த 5 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 1,720 ரூபாயாகவும், 848 ரூபாயாக இருந்த 2.3 கிலோ கிராம் சிலிண்டரின் விலை 800 ரூபாயாகவும் குறைவடைந்துள்ளன.

# தொலைத்தொடர்பு சேவை கட்டணங்களும் உயர்வு

12 கோடி ரூபாய்க்கும் அதிகமான வருடாந்த வருமானத்தைப் பெறும் இறக்குமதியாளர்கள், உற்பத்தியாளர்கள், சேவை வழங்குநர்கள், மொத்த விற்பனையாளர்கள் மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு 2.5 சதவீத சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி விதிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 2.5 சதவீத வரியை சேர்க்கும் போது, முற்கொடுப்பனவு, பிற்கொடுப்பனவு, இணையத்தளம் மற்றும் தொலைக்காட்சி சேவைகளுக்கான கட்டணப் பொதிகள் திருத்தப்படவுள்ளதாக நிறுவனங்கள் அறிவித்துள்ளன. புதிய கட்டணங்கள் குறித்த விவரங்களை தங்களது அதிகாரபூர்வ இணையதளங்களில் காட்சிப்படுத்தப்படும் என்றும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

# வசந்த முதலிகே கொல்லப்படலாம்

தலைவர் சஜித் பிரேமதாஸ, வசந்த முதலிகே தப்பிச் செல்ல முயன்றார் எனக்கூறி அவரைக் கொலை செய்யும் ஆபத்து காணப்படுவதாகவும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய சஜித், வசந்த முதலிகே, கல்வெவ சிறிதம்ம தேரர், ஹஷாந்த குணதிலக்க ஆகிய மூவரையும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து தங்காலை முகாமில் தடுத்து வைத்துள்ளனர். 40 நாட்களுக்கு மேலாக இவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை, இரவு நேரங்களில் வசந்த முதலியை பல்வேறு இடங்களுக்கு அழைத்துச் செல்கிறார்கள். உண்மையில் இரவில் அழைத்துச் செல்வது ஏன்? இதனை விளையாட்டாக எடுக்க வேண்டாம். வசந்த முதலிகே தப்பிச் செல்ல முயற்சித்ததாகக் கூறி அவர் கொலை செய்யப்படலாம் எனவும் தெரிவித்தார். ஜெனிவாவில் இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பில் பேசப்படும் தற்போதைய காலகட்டத்தில் அரசாங்கம் இவ்வாறு நடந்துக்கொள்வது சரியா? எனவும் எதிர்க்கட்சி தலைவர் கேள்வி எழுப்பினார்.

இந்த விடயத்தில் நடந்திருப்பது அரச பயங்கரவாதமே எனவும் தெரிவித்த சஜித், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் மீதும் இந்த முட்டாள் அரசாங்கம் தாக்குதலை மேற்கொள்கிறது எனவும் தெரிவித்தார்.

# விசாரணைகளை நிறைவு செய்தது உயர் நீதிமன்றம்

எழுத்துமூல சமர்பிப்புகளை 3 வாரங்களுக்குள் தாக்கல் செய்யுமாறு, இரு தரப்பினருக்கும் நேற்று (05) உத்தரவிட்டது.

அதற்கமைய, இந்த மனுக்கள் தொடர்பாக உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு உரிய காலப்பகுதிக்குள் வழங்கப்படவுள்ளது. பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, எல்.டி.பி. தெஹிதெனிய, முர்து பெர்னாண்டோ, எஸ்.துரைராஜா, ஏ.எச்.எம்.டி. நவாஸ் மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய எழுவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போது, மனுதாரர் மற்றும் பிரதிவாதி தரப்பினர் முன்வைத்த வாதங்களை நிறைவு செய்யப்பட்டதையடுத்து, மூன்று வாரங்களுக்குள் எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகளை தாக்கல் செய்யுமாறு இரு தரப்புகளுக்கும் அமர்வு உத்தரவிட்டது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ ஆகியோர் தொடர்பில் அரசியலமைப்பின் 12(1) சரத்தின் பிரகாரம் நீதிமன்ற நடவடிக்கைகளைத் தொடர்வதற்கு உயர்நீதிமன்றம் 2019 ஆம் ஆண்டு ஒக்டோபர் 2 ஆம் திகதி அனுமதி வழங்கியது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் உட்பட 13 மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுக்களில், பயங்கரவாதத் தாக்குதல்களுக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ காரணமானவர்களைத் தண்டிக்க உத்தரவிடுமாறும் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாசிசம், அடிப்படைவாதம் பரப்பப்படுகின்றது

பாதாள கோஷ்டியினரைப் போலவும் மாணவர் அமைப்புகள் நடந்துகொள்வதாகவும் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய (05) அமர்வில் கலந்துகொண்டு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பி உரையாற்றிய அவர், பேராதனை பல்கலைக்கழக பீடாதிபதி தனக்கு விடுக்கப்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். கோட்டாவை வீட்டுக்கு அனுப்பிய எங்களுக்கு பீடாதிபதியை வீட்டுக்கு அனுப்புவது சிரமமல்ல என மாணவர்கள் பீடாதிபதிக்கு அச்சுறுத்தல் விடுக்கிறார்கள் எனவும் கூறினார்.

இதேவேளை, பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் பல்கலைக்கழகத்துக்குள் பாசிசத்தையும், அடிப்படைவாதத்தையும் கொண்டு சேர்ப்பதாக தெரிவித்த அவர், அச்சுறுத்தல், குண்டர் செயற்பாடுகள், பாதாள கோஷ்டியினர் போல இவர்கள் செயற்படுவதாகவும் தெரிவித்தார்.

முதலாம் வருட மாணவருக்கு கைக்கடிக்காரம் கட்டுவதற்கு அனுமதிப்பதில்லை. அவ்வாறு வரும் மாணவரை காலில் உதைக்கிறார்கள். அதேபோல மாணவிகளும் கவுன் மற்றும் செருப்பை அணிந்தே வர வேண்டும். தோடுகள், மாலைகள் அணிந்து வர முடியாது. இதற்கும் மேலான கடுமையான பகடிவதைகள் இருக்கின்றன. அதனை இங்கு கூற முடியாது எனவும் தெரிவித்தார்.

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் உள்ள பேராசிரியர்கள், பீடாதிபதிகள், மாணவர்கள் உள்ளிட்டோரைப் பாதுகாக்கும் பொறுப்பு எமக்கு இருக்கிறது. ஜனநாயகத்துக்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு விளக்கங்களை வழங்க முடியும். குறிப்பாக போராட்டங்களுக்கு சென்று தாக்குதலை மேற்கொண்டு வன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபட்டு நீதிமன்றத்துக்கு சென்று பிணையில் விடுதலை செய்யப்பட்டு வெளியில் வரும்போது கரகோசங்களை எழுப்பி வரவேற்பதையே எதிர்க்கட்சி தலைவர் ஜனநாயகம் என நினைத்துக்கொண்டிருக்கிறார் எனவும் தெரிவித்தார்.

# ஜனாதிபதி மாளிகை சேதம்: அடுத்த வாரம் அறிக்கை

பல விடயங்களை இந்த அறிக்கை வெளிப்படுத்தும் என நம்புவதாகவும் அறிக்கையின் நகல் பொலிஸ்மா அதிபரிடமும் கையளிக்கப்பட உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மாளிகையில் சேதப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பில் அறிக்கை ஒன்றை வழங்குமாறு பொலிஸார் விடுத்த கோரிக்கையை அடுத்து தொல்பொருள் திணைக்களம் இந்த விசாரணைகளை மேற்கொண்டது.

மேல்மாகாண தொல்லியல் உதவி ஆணையாளர் ஷியாமலி ராஜபக்ஷவின் மேற்பார்வையில் அந்த திணைக்களத்தின் விசேட அதிகாரிகள் குழுவொன்று ஜனாதிபதி மாளிகைக்கு சென்று இந்த விசாரணைகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.




பல்கலைக்கழகங்களினுள்

# அரசியல் தீயை மூட்ட வேண்டாம்



அரசியல் நோக்கத்திலும் பல்வேறு நோக்கங்களிலும் ஒருசிலர் பல்கலைக்கழகங்களினுள் செயற்பட்டு வருகின்றனர். தயவு செய்து அங்கு அரசியல் தீயை மூட்ட வேண்டாம் என வலியுறுத்திய உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் பல்கலைக்கழகத்திலோ வெளியிலோ வன்முறைக்கு ஒருபோதும் இடமளிக்க முடியாது எனவும் தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் பகிடிவதை சம்பவங்கள், அது தொடர்பிலான பெற்றோரின் முறைப்பாடுகள் மற்றும் அங்கு இடம் பெற்று வரும் சம்பவங்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று எம்.பிக்கள் சிலர் முன்வைத்த கருத்துக்கள் தொடர்பிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் 45000 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் உள்ளனர். அதில் ஒரு சிலரது மனித உரிமை பற்றி கவனம் மேற்கொள்வதா அல்லது 99 வீதமானோரின் மனித உரிமை தொடர்பில் கவனம் செலுத்துவதா என்பது தொடர்பில் கற்றவர்கள் நன்கு அறிவர். பேராதனை சம்பவங்கள் தொடர்பில் எனக்கு பெற்றோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமிருந்து 600க்கும் மேற்பட்ட குறுஞ்செய்திகள் வந்துள்ளன.மனித உரிமையை நாம் மதிக்கின்றோம். . எனினும் குறுகிய நோக்கங்களுக்காக செயல்படுபவர்கள் மற்றும் வன்முறைகளை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம் என்றார்.


## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டம் இலக்கம் 7 இன் பிரிவு 11(5) இன் படி, 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க நிறுவனச் சட்டத்தின் பிரிவு 11(2) இன் படி பின்வரும் நிறுவனங்களின் பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன என்பதை இதன்மூலம் தெரிவித்துக் கொள்கிறோம்.

| நிறுவனத்தின் பழைய பெயர் | நிறுவனத்தின் புதிய பெயர் |
|---|---|
| டவுனிங் எஸ்டேட்ஸ் லிமிடெட் [PB 989] | டவுனிங் எஸ்டேட்ஸ் (பீவீடீ) எல்டீடி |
| தோர்ன்டன் எஸ்டேட்ஸ் லிமிடெட் [PB 897] | தோர்ன்டன் எஸ்டேட்ஸ் (பீவீடீ) எல்டீடி |
| ரிப்லி எஸ்டேட்ஸ் லிமிடெட் [PB 1555] | ரிப்லி எஸ்டேட்ஸ் (பீவீடீ) எல்டீடி |
| பெம்புரோக் எஸ்டேட்ஸ் லிமிடெட் [PB 1004] | பெம்புரோக் எஸ்டேட்ஸ் (பீவீடீ) எல்டீடி |

**அனைத்து நிறுவனங்களின் பதிவு செய்யப்பட்ட முகவரி, இல.02, டீல் பிளேஸ், கொழும்பு 03**

**செயலாளர்கள்**
**ஜனசக்தி கோபரேட் சேர்விசஸ் லிமிடெட்**


# மாணவர்கள் மன அழுத்தத்தில்



பல்கலைக்கழகத்தில் உள்ள தங்களது பிள்ளைகளை கூட்டங்களுக்கும், போராட்டங்களுக்கும் பலவந்தமாக அழைத்துச் செல்வதாக மாணவர்களின் பெற்றோர்கள் குற்றஞ்சுமத்துவதாக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார சபைக்கு தெரிவித்தார்.

குருநாகல் மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு சென்றுள்ள மாணவர்களின் பெற்றோர்கள் பலர் தனதுக்கு தொலைபேசியில் அழைத்து கண்ணீர் வடிக்கிறார்கள். கூட்டங்களுக்கும் போராட்டங்களுக்கு தங்களது பிள்ளைகளை பலவந்தமாக அழைத்துச் செல்லப்படுகிறார்கள் என பெற்றோர்கள் தன்னிடம் கூறியதாகவும் தெரிவித்தார்.

மேலும் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்படும் பகடிவதைகளால் தங்களது பிள்ளைகள் பெரும் பாதிப்புகளுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் பெற்றோர்கள் கூறுகிறார்கள். பல்கலைக்கழக மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ள நிலையில் மற்றொரு மாணவரும் காணாமல் போயுள்ளதாகவும், பல்கலைக்க மாணவர்கள் பெரும் மன அழுத்தத்தில் இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனவே, இது தொடர்பில் உயர் கல்வி அமைச்சர், உயர் கல்வி இராஜாங்க அமைச்சர் ஆகியோர் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பல்கலைக்கழகங்களுக்குள் மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.



வடக்கில்

# நில அபகரிப்பை நிறுத்தவேண்டும்

மகாவலி வலயம் என்ற பெயரில் வடக்கில் நிலங்களை தந்திரமாக அபகரிக்கும் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

சட்டக் கல்லூரி மாணவர்களின் பரீட்சையின் போது ஏற்கனவே தமிழ், சிங்கள மொழிகளில் மாணவவர்கள் தோற்றுவதற்கு வாய்ப்புகள் இருந்த போதும், இப்போது அது ஆங்கில மொழி மூலம் மாத்திரம் பரீட்சை எழுதும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது தொடர்பில் நீதி அமைச்சருக்கு அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், பிரதம நீதியரசருக்கு அறிவித்துள்ளதாகவும், அதன்படி முடிவெடுக்கப்படும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரதேசத்திற்குரிய கோத்தாபய கடற்படை முகாம் காணி தொடர்பில் இங்கே குறிப்பிட வேண்டியுள்ளது. அந்த முகாம் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் உருவாக்கப்பட்டது. அரச, தனியார் காணிகள் அடங்கலாக 671 ஏக்கர் நிலத்தை அங்கே கடற்படை தம் வசம் வைத்துள்ளது.

அங்கு தனியார் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்த போதும், அதற்கு எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. அங்கு மக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் போராட்டங்களால் அங்கு நில அளவை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்ட போதும், கொழும்பில் இருந்து செல்லும் அதிகாரிகளை கொண்டு அந்த காணிகளை அளந்து கையகப்படுத்த முயற்சிக்கப்படுகின்றது என்றார்.

# பாராளுமன்ற ஜனநாயகம் கட்டிக்காக்கப்பட வேண்டும்



மக்களுக்கு நம்பிக்கையானதாக பாராளுமன்றம் இருக்க வேண்டும். இந்த நம்பிக்கை இல்லாது போனால் பாராளுமன்ற ஜனநாயகம் வீழ்ச்சி காணும். அவ்வாறு ஜனநாயகம் வீழ்ந்தால் இந்த நாட்டிலுள்ள மக்கள் வாழ்க்கைக்கு பொறுப்பானவர்கள் எவரும் இல்லாது போவார்கள் எனநீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற நிலையியல் கட்டளைகள் திருத்தம் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனநாயகம் வீழ்ந்தால் இந்த நாட்டிலுள்ள மக்கள் வாழ்க்கைக்கு பொறுப்பானவர்கள் எவரும் இல்லாது போவார்கள் எனமக்களுக்குரிய பாதுகாப்பு இல்லாது போகும். இதனால் ஜனநாயக்கத்தை பாதுகாக்க வேலைத்திட்டங்கள் அவசியமாகும். பாராளுமன்ற முறை வீழ்ந்தால் இந்த நாட்டின் நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறைக்கு இருப்பு இல்லாது போய்விடும். இதனால் காலத்திற்கு தேவையான வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த திருத்தங்களை நிறைவேற்றுவதற்காக அனைத்து எம்பிக்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். என்றார்.


## வாடகைக்கு

5 படுக்கை அறைகள், வத்தளை அல்விஸ் டவுனில் சகல வசதிகளுடன், லூசியம் பாடசாலைக்கு நடந்து செல்லும் தூரத்தில் அழைக்கவும் 0772789494, 0777,760053



## கம்பஹா மாநகர சபை

**2023 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து 2023 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும், வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம், இறைச்சிக்கடை யக்கலை வாராநத் சந்தை மற்றும் நகர சபை சிற்றுண்டிச் சாலை ஆகியவற்றுக்கான விலைமனுக்கோரல்.**

2023 ஜனவரி 01ஆம் திகதியில் இருந்து 2023 டிசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் வாகனங்கள் நிறுத்தும் இடம், பொது மலசலக்கூடம், இறைச்சிக்கடை யக்கலை வாராந்த சந்தை மற்றும் நகர சபை உணவு விடுதி ஆகியவற்றுக்காக வர்த்தக உரிமையை குத்தகைக்கு விடுப்பதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இதற்கு மேலாக வாகனங்கள் நிறுத்துமிடங்கள் மற்றும் வாராந்த சந்தைக்கான அனுமதி பத்திரத்தை டிஜிட்டல் மயமாக்கலுக்கான முன்மொழிவுக்கான கோரிக்கையை REQUEST FOR PROPOSAL (RFP) பெறவும் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

விலைமனு விண்ணப்பம் அதற்கான விலைமனு வைப்பு பணம் மற்றும் விலைமனு விண்ணப்பக் கட்டணம் ஆகியவற்றை செலுத்தி 2022.10.25 ஆம் திகதி வரையிலும் வேலை நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல 3.00 மணிவரையிலும் விலைமனு விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளமுடியும்.

சீல் வைக்கப்பட்ட விலைமனு விண்ணப்பங்களை 2022.10.26 ஆம் திகதி முற்பகல் 10:00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும் என்பதுடன் அன்றையதினம், முற்பகல் 10:15 க்கு விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனு கோருவோர் அந்த நேரத்தில் பங்குபற்ற முடியும்.

தெரிவுச் செய்யப்பட்ட விலைமனுகாரர்களின் விலைமனு ஏற்றுக்கொள்ளப்பட்டது என அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் 7 நாட்களுக்குள் 3 மாதத்துக்கான விலைமனு கூலியுடன் அதற்கான முத்திரை வரியுடன் கூடிய அனைத்துடன் கூடிய வைப்பீட்டு பணத்தையும் ஒரே தடவையில் செலுத்தி ஒப்பந்தம் செய்யப்படவேண்டும். 03 மாதங்களுக்கான வைப்பீட்டு பணத்தை ஒரே தடவையில் செலுத்தமுடியாமல் போகும் விலைமனு கோருவோருக்கு விலைமனு வழங்கப்படமாட்டாது. மேலதிக விவரங்களை 033 – 4942296 அல்லது 033 - 4942283 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளமுடியும்.

| இல | இடம் தொடர்பிலான விவரம் | விலைமனு கோரல் விண்ணப்பக் கட்டணம் | விலைமனு வைப்பீட்டு பணம் ரூபாய் (மீளக் கையளிக்கப்படும்) | வருடாந்திர குறைந்தபட்ச ஏலத்தொகை |
|---|---|---|---|---|
| | **இறைச்சிக்கடை** | | | |
| 01 | ஸ்ரீஇல. 07 பொது வர்த்தக நிலைய பன்றி இறைச்சிக் கடை (கம்பஹா) | 1,000.00 | 10,000.00 | 756,580.00 |
| 02 | இல. 08 பொது வர்த்தக நிலையம் ஆட்டிறைச்சி கடை (கம்பஹா) | 1,000.00 | 10,000.00 | 117,000.00 |
| | **வாகனங்கள் நிறுத்தும் இடம்** | | | |
| 03 | ஜா-எல, கம்பஹா பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் (வலய இல. 01) | 1,000.00 | 44,600.00 | 150,000.00 |
| 04 | கம்பஹா - கொழும்பு பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் (வலய இல. 02) | 1,000.00 | 65,500.00 | 400,000.00 |
| 05 | கம்பஹா - நிட்டம்புவ பேருந்து நிலையம் வாகனங்கள் நிறுத்தும் இடம் (வலய இல. 02) | 1,000.00 | 30,300.00 | 300,000.00 |
| 06 | வைத்தியசாலைக்கு அண்மையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 64,500.00 | 1,400,000.00 |
| 07 | பிரதான வாகனங்கள் நிறுத்துமிடம் | 1,000.00 | 64,500.00 | 750,000.00 |
| 08 | ஜா-ஹெல பழைய பேருந்து நிலைய வாகனங்கள் நிறுத்தும் இடம் | 1,000.00 | 20,000.00 | 100,000.00 |
| | **பொது மலசலகூடம்** | | | |
| 09 | ஒருத்தொட்ட வீதி பேருந்து நிலையத்துக்கு அண்மையிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 90,100.00 | 1,300,000.00 |
| 10 | ஜா-ஹெல வீதி பேருந்து நிலையத்துக்கு அண்மையிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 28,500.00 | 300,000.00 |
| 11 | வைத்தியசாலைக்கு அருகிலுள்ள மலசலக்கூடம் | 1,000.00 | 28,500.00 | 150,000.00 |
| | **வாராந்த சந்தை** | | | |
| 12 | யக்கல வாராந்த சந்தை | 1,000.00 | 105,000.00 | 4,200,000.00 |
| | **பூக்கள் பகுதி** | | | |
| 13 | மத்திய பஸ் நிறுத்துமிட அலங்கார பூக்கள் பகுதி | 1,000.00 | 30,600.00 | 200,000.00 |
| | **உணவு விடுதி** | | | |
| 14 | கம்பஹா நகர சபை உணவு விடுதி | 1,000.00 | 5,000.00 | 36,108.00 |
| 15 | வாகனங்கள் நிறுத்தும் கட்டணம் மற்றும் வாராந்த சந்தைக்கான அனுமதி பத்திரத்தை டிஜிட்டல் மயமாக்கலுக்கான முன்மொழிவுக்கான கோரிக்கையை REQUEST FOR PROPOSAL (RFP) | 1,000.00 | 20,000.00 | |

இதற்கு மேலாக வாகனங்கள் நிறுத்துமிடங்கள் மற்றும் வாராந்த சந்தைக்கான அனுமதி பத்திரத்தை டிஜிட்டல் மயமாக்கலுக்கான முன்மொழிவுக்கான கோரிக்கையை REQUEST FOR PROPOSAL (RFP) முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும் ஏலதாரர்கள் ஏலதாரர்களின் முன்மொழிவுகளை மதிப்பாய்வு செய்த பின்னர், வாகன நிறுத்தக் கட்டணம் மற்றும் வாராந்திர சந்தைக் கட்டணங்களை டிஜிட்டல் முறையில் வசூலிப்பது பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருந்தால், அதற்கான டெண்டர்கள் வழங்கப்படும் என்று மேலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நீங்கள் சமர்ப்பிக்கும் டெண்டர் தொகைக்கு முத்திரை கட்டணம் வசூலிக்கப்படும்.

**2021.10.06**
**ஜே. ஏ. டீ. ஜீ. எஸ். ரணசிங்க,**
**நகரரட்சி ஆணையாளர்,**
**மாநகர சபை**
**கம்பஹா**

கல்முனை விகாராதிபதியின் பிணைக்கு

# கையொப்பம் இட்டவர்களின் வீடுகள் மீது தாக்குதல்

■ காரைதீவு நிருபர் சகா

சிறுவர் துஷ்பிரயோக குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்த கல்முனை சுபத்ரா ராமய விகாரையின் விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரருக்கு கல்முனை நீதவான் நீதிமன்றம் வெள்ளிக்கிழமை (30) பிணை வழங்கியது. இருப்பினும், அதற்கான ஆவணங்களை சமர்ப்பிப்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக, நேற்று முன்தினம் (04) காலை மட்டக்களப்பு சிறைச்சாலையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

மூன்று தனித்தனி வழக்குகளுக்காக தலா மூன்று பேரின், ஐந்து இலட்சம் படி, ஒன்பது பேரின் சரீர பிணையில் விடுதலை செய்யப்பட்டார். பிணைக்கு ஒப்பமிடுவதில் ஏற்பாட்டாளராக இருந்து செயற்பட்டும், ஒப்பமிட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரன் ராஜன், சிறைச்சாலையிலிருந்து தேரரை அழைத்து வந்து விகாரையில் உள்ள பொலிஸாரிடம் ஒப்படைத்தார்.

செவ்வாய்க்கிழமை நள்ளிரவு, விகாராதிபதி பிணைக்காக கையொப்பம் இட்டவர்கள் இரண்டு பேரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கல்முனை 01 C பகுதியில் அமைந்துள்ள, முஸ்லிம் குடியேற்ற தொடர்மாடி பகுதிக்கு முன்னால் உள்ள, மயில்வாகனம் முத்துலெட்சுமி, ஹர்சன் டி சில்வா ஆகியோரின் வீடுகளின் மீதே வாள் மற்றும் கற்களால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.



இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மக்கள் கல்முனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அதேவேளை, விகாராதிபதியின் பிணை மனுவை எதிர்த்து, கல்முனை நீதாவன் நீதிமன்றத்தில் பத்துக்கும் மேற்பட்ட சட்டத்தரணிகளை கொண்ட குழு, பொலிஸாருடன் வாதங்களை முன்வைத்திருந்த நிலையில், கல்முனை நீதவான் நீதிமன்றம் விகாராதிபதிக்கு பிணை வழங்கியது.

கல்முனை விகாராதிபதி, கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பில், உறுப்பினர் ராஜனுடன் உண்ணாவிரதம் இருந்து, கல்முனை தமிழ் மக்களுக்கு ஆதரவாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.



'அதிகாரிகளை அனுப்பு'; 'அதிகாரிகளை அனுப்பாதே'

# ஏட்டிக்குப்போட்டி

## முல்லைத்தீவில் மீனவர்கள் இரு தரப்பாகப் போராட்டம் இரண்டு தரப்பின் மீதும் கண்ணீர்புகை, நீர் தாரை பிரயோகம் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதி

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளுக்கு துணை போகும் அதிகாரிகளை மாற்றுமாறு கோரி, முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகத்தை திங்கட்கிழமை (03) காலை முதல் முற்றுகையிட்ட மீனவர்கள், தமக்கான தீர்வு கிடைக்கும் வரை, தொடர் போராட்டத்தில் குதித்திருந்தனர். இவர்களது போராட்டம் நேற்று (05) மூன்றாவது நாளாகத் தொடர்ந்தது.

இந்நிலையில், போராடும் மீனவர்கள் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருக்கும் கொக்கிளாய், சாலை, தென்பகுதி ஆகிய பிரதேசங்களில் இருந்து வருகைதந்து, மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்களும் மாத்தளன் பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடும் தமிழ் மீனவர்களும் முஸ்லிம் மீனவர்களும் என சுமார் 300 பேரளவில், முல்லைத்தீவு பஸ் நிலையம் அருகே, நேற்றுக் காலை 11 மணியளவில், முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என கோரி போராட்டத்தை ஆரம்பித்தனர்.



இந்நிலையில், அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என்று கோரும் மீனவர்களுக்கும் அதிகாரிகளை மாற்ற வேண்டும் என்று கோரி போராடும் மீனவர்களுக்கும் இடையே முரண்பாடுகள் ஏற்படலாம் என்ற நிலையில், பொலிஸார், கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நோக்கி போராட்டக்காரர்கள் செல்லாத வகையில் ஒரு வீதித்தடையையும் தொடர் போராட்டத்தில் ஈடுபடும் மீனவர்கள் போராட்டக்காரர்களை நோக்கி வரமுடியாத வகையில் ஒரு வீதித் தடையையும் ஏற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில், 'அதிகாரிகளை மாற்ற வேண்டாம்' எனக் கோரிய போராட்டக்காரர்கள், பொலிஸார் அமைத்த வீதித்தடையை உடைத்துக்கொண்டு, கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலகம் நோக்கி செல்ல முற்ப்பட்டபோது, போராட்டக்காரர்கள் மீது, பொலிஸார் கண்ணீர் புகை மற்றும் நீர்த்தாரை பிரயோகம் செய்தனர்.

இதனையடுத்து, தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற மீனவர்களும் வீதித்தடையை உடைத்துச் செல்ல முற்பட்ட போது, அவர்கள் மீதும் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப்புகை பிரயோகம் செய்யப்பட்டது. இதன்போது பாதிக்கப்பட்ட ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதன் பின்னர், தொடர் போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் கடற்றொழில் நீரியல் வள திணைக்கள அலுவலக வாயிலில் அமைக்கப்பட்ட கொட்டகையில் போராடி வரும் அதே வேளை, அதிகாரிகளை மாற்ற வேண்டாம் என்று கேட்டு போராட்டத்தை முன்னெடுத்தவர்கள் மாவட்ட செயலக முன்றலில் போராடி வருகின்றனர். முல்லைத்தீவு மாவட்டத்தின் 24 சங்கங்களை சேர்ந்த மீனவர்கள் குறித்த போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வியாபார கட்டடத் தொகுதி புகுவிழா

■ அ. அச்சுதன்

திருகோணமலை நகராட்சி மன்றத்தால் 23 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு மாடி வியாபார கட்டடத் தொகுதி புகுவிழா விஜயதசமி தினமன்று (05) நடைபெற்றது.

இந்தக் கட்டடத் தொகுதியின் முதலாம் தளத்தில் ஒன்று கூடல் மண்டபத்தையும் இரண்டாவது தளத்தில் வாடகைக்கு வழங்கக் கூடிய தங்கும் அறைகளையும் கொண்டதாக அமையப் பெற்ற இந்தக் கட்டட தொகுதி, திருகோணமலை கடற்படைத்தள வீதியில் அமைந்துள்ளது.



# காட்டுக்குள் கசிப்பு உற்பத்தி



■ ஆர். ஜெயஸ்ரீராம்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவின் கிண்ணையடி, குட்டிக்காடு காட்டுப் பிரதேசத்தில், வாழைச்சேனை ஊழல் ஒழிப்பு பொலிஸ் பிரிவு மேற்கொண்ட நடவடிக்கையின்போது, கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் 108 லீற்றர் கசிப்பு உற்பத்திக்கு பயன்படும் கோடாவும், 4,500 மில்லி லீற்றர் கசிப்பும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லசந்தபண்டாரவின் வழிகாட்டலில் பிரதேசத்தில் இவ் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர் மற்றும் பொருட்கள் அனைத்தும் வாழைச்சேனை மாவட்ட நீதவான் நீதி மன்றத்தில் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கையை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# அல் குர்ஆனை மனனம் செய்த மாணவிக்கு கௌரவம்



■ எச்.எம்.எம் பர்ஸான்

ஓட்டமாவடி, மத்ரஸது ஸைத் பின் தாபித் அல் குர் ஆன் பகுதிநேர மனனப் பிரிவில் இணைந்து, அல் குர்ஆனை மனனம் செய்த மாணவி எஸ்.ஏ பாத்திமா றிம்ஸாவை கௌரவிக்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை (02) நடைபெற்றது.

மத்ரஸாவின் அதிபர் அல் ஹாபிழ் ஏ.எல் நிஜாம்தீன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாணவி றிம்ஸாவுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டமையுடன் மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.



# நல்லூர் வாழை வெட்டு

■ எம். றொசாந்த்

நல்லூர் கந்தசுவாமி கோவில் விஜயதசமி மானம்பூ உற்சவம் புதன்கிழமை (05) பக்தி பூர்வமாக இடம்பெற்றது.

காலை 6.45 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் குதிரை வாகனத்தில் முருகப்பெருமான் எழுந்தருளி வெளிவீதி உலாவந்ததுடன் மானம்பூ உற்சவம் இடம்பெற்றது.

மரணச்சடங்குக்கு சென்றிருந்த வேளை

# கதவை உடைத்து நகைகள் திருட்டு

■ எம். றொசாந்த்

யாழ்ப்பாணம்,டு அராலி பகுதியில் வீடொன்றின் கதவை உடைத்து உள்நுழைந்த திருடர்கள், வீட்டில் இருந்த ஆறு பவுண் நகைகளை திருடி சென்றுள்ளனர்.

வீட்டார் மரணச்சடங்குக்கு சென்று விட்டு, வீடு திரும்பிய வேளை, வீட்டின் முன் கதவு உடைக்கப்பட்ட நிலையில் காணப்பட்டுள்ளது. வீட்டினுள் சென்று பார்த்த போது, பொருட்கள் சிதறிக் காணப்பட்டதுடன், வீட்டில் வைத்திருந்த ஆறு பவுண் நகை திருட்டு போயுள்ளமை தெரியவந்தது.

சம்பவம் தொடர்பில், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

போதைவஸ்து பாவனையைத் தடுக்காத அதிகாரிகளின்

# வீடுகளின் கதவுகளையும் நாளை தட்டும்

■ நூருல் ஹுதா உமர்

இன்று இளைஞர்கள் போதை வஸ்து பாவனையில் மூழ்கி அவர்களுடைய எதிர்காலத்தை அழித்துக் கொண்டு செல்கின்றனர். நாம் இன்று வாய் திறக்கவில்லை என்றால், நாளை நாம் அனைவரும் தலையில் கை வைத்து, வாயை மூட வேண்டிய ஒரு கட்டத்துக்குத் தள்ளப்படுவோம் என முன்னாள் இளைஞர் பாராளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சாரணருமான ஏ.எம்.எம் தில்சாத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முக்கிய பதவிகளில் உள்ள நிர்வாகிகள், தலைமைகள் எமது பிரதேச இளைஞர்கள் குறித்து சிந்தியுங்கள். நமது சமூகத்தில் உள்ள பொறுப்பு வாய்ந்த பொறுப்புதாரிகளே, இன்று நாம் அதற்கு எதிராக களத்தில் இறங்கி கட்டுப்படுத்தாவிட்டால். உங்கள் வீட்டுக்குள்ளும் நாளை இந்தப் போதை வஸ்து பாவனையின் விளைவுகளை எதிர் நோக்க வேண்டி வரும் என்றார்.

# அக்கரைப்பற்றில் 100 வயது முதியவர் கௌரவிப்பு

■ எம்.எல்.எஸ் டீன்

அக்கரைப்பற்று பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த சிறுவர், முதியோர் தின நிகழ்வு பிரதேச செயலாளர் ரீ.எம்.எம் அன்சாரின் வழிகாட்டலில் சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் எம்.பி.எம் ஹூசைன் தலைமையில் பிரதேச செயலக கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில், அக்கரைப்பற்று 12ஆம் பிரிவைச் சேர்ந்த 100 வயதுடைய எம்.ஐ.எம் இஸ்மாயில் என்ற முதியவர் கௌரவிக்கப்பட்டதுடன், பல முதியவர்களுக்கும் சிறுவர்களுக்கும் பரிசுகளும் வழங்கிவைக்கப்பட்டன.



# வேப்பங்குளத்தில் வெடிகுண்டுகள் மீட்பு

■ க. அகரன்

வவுனியா, வேப்பங்குளத்தில் உள்ள தனியார் காணியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட மலசலகூடத்தைப் புனரமைக்கும் போது, குழியில் இருந்து குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, 60 மில்லி மீற்றர் குண்டும் கைக்குண்டும் சிறிய ரக மிதிவெடியும் மீட்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சரஸ்வதி தேசிய கல்லூரியின் வாணி விழா




பதுளை சரஸ்வதி தேசிய கல்லூரியில், நேற்று (05) நடைபெற்ற வாணி விழாவில், கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் பிரதம விருந்தினராகவும் ஊவா மாகாண தமிழ் கல்வி பிரதி பணிப்பாளர் யோ. கலையரசி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டிருந்தனர். (எம். செல்வராஜ்)




# கிறேண்ட் ஹோட்டலில் விஜயதசமி

நுவரெலியா கிறேண்ட் ஹோட்டலில் விஜயதசமி பூஜை நேற்று (05) வெகு விமரிசையாக நடைபெற்றது. இந்தப் பூஜைக்கான ஏற்பாடுகளை நுவரெலியா கிறேண்ட் ஹோட்டல் நலன்புரி சேவை மன்றத்தினர் செய்திருந்தனர். (எஸ்.கே குமார்)




# தலவாக்கலையில் விஜயதசமி

நவராத்திரி விழாவின் இறுதி நாளான நேற்று (05) தலவாக்கலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்தில் விஜயதசமி விசேட பூஜைகளும் வித்தியாரம்ப நிகழ்வுகளும் ஆலய பிரதம குருக்கள் லங்கா தேசமாணி முத்துசாமி ஐயர் பிரசாந்த் சர்மா தலைமையில் நடைபெற்றது. (பி. கேதீஸ்)




# வாணிவிழா

தலவாக்கலை, கிறேட்வெஸ்டன் பாடசாலையில் நேற்று (05) வாணிவிழாவின் இறுதி நாள் பூஜைகள் நடைபெற்று, கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. இதன்போது பாடசாலை அதிபர் எம். ஐ.எம் பாரிஸ், பிரதி அதிபர் விஜயசுந்தரம் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர் கலந்துகொண்டனர். (பி. கேதீஸ்)




# இயந்திரங்கள் வழங்கப்பட்டன

நுவரெலியா மாவட்டத்தில் கிராமிய கைத்தொழில்களை ஊக்குவிக்கும் நோக்கில், சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வழங்கும் நிகழ்வு நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. நுவரெலியா மாவட்டத்தின் ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட சிறுதொழில் முயற்சியாளர்களுக்கு இந்த இயந்திரங்கள் மற்றும் கருவிகள் நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தலைமையில் வழங்கப்பட்டன. (பி. கேதீஸ்)

## யட்டவத்த பிரதேச செயலகத்தின்

# பெயரை பயன்படுத்தி மோசடி

மஹேஸ் கீர்த்திரத்ன

யட்டவத்த பிரதேச செயலகம் ஊடாக பொருட்கள் வழங்கப்படுவதாகத் தெரிவித்து, சில குழுக்கள் மக்களிடம் பணம் வசூலிப்பதாக தெரியவந்துள்ளது.

எனினும் பிரதேச செயலத்தால் அவ்வாறு எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை என செயலகம் அறிவித்துள்ளது.

பிரதேச செயலகத்தால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்களிடம் இருந்து எவ்வித நிதியும் அறவிடப்படாது என்றும் இவ்வாறான சம்பவங்கள் ஏதேனும் நடந்தால் உடனடியாக அலுவலக தொலைபேசி இலக்கமான 066 49 33 247 என்ற இலக்கத்துக்கு தெரிவிக்குமாறு மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## வாசிப்பு பழக்கம்

# மதிநுட்பம் நிறைந்த மனிதரை உருவாக்கும்

எஸ்.கணேசன்

வாசிப்பு பழக்கம், அறிவு மற்றும் மதிநுட்பம் நிறைந்த மனிதரை உருவாக்கும் என கொட்டகலை பிரதேச சபை தவிசாளர் ராஜமணி பிரசாத் தெரிவித்தார்.

கொட்டகலை பிரதேச சபைக்கு உட்பட்ட ஆறு பாடசாலைகளுக்கு வாசிப்பு திறனை மேம்படுத்தும் நோக்கில் கொட்டகலை பிரதேச சபையின் ஏற்பாட்டில், மாணவர்களுக்கு புத்தகங்களை வழங்கிவைத்து உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து தெரிவித்த அவர், வாசிப்பின் மூலம் ஞாபக சக்தி அதிகரிப்பு, பகுத்தறிவு திறன் அதிகரித்தல், சொல்லாற்றல் அதிகரித்தல், எழுதும் திறன் அதிகரித்தல், மன ஒருமைப்பாடு அதிகரித்தல், மன அமைதி எனப் பல்வேறு பயன்கள் எமக்கு இலவசமாக கிடைக்கின்றன. குறிப்பாக வாசிக்கும் பழக்கத்தை கொண்ட மக்களை அதிகமாகக் கொண்ட நாடுகளே இன்றைய உலகப் பொருளாதாரத்தை தீர்மானிக்கும் சக்திகளாகவும் திகழ்கின்றன. ஆக சிறந்த வேலை வாய்ப்புகளையும் சிறந்த பொருளாதார வல்லமை கொண்ட நாட்டையும் கட்டியெழுப்ப அறிவு அவசியமானது. அதற்கு வாசிப்பு பழக்கமும் அச்சாணியாக விளங்குகின்றது.

இறுதியாக தனிநபரினதும் சமூகத்தினதும் வெற்றிக்கு வாசிப்பு ஒரு பிரதான காரணமாகத் திகழ்கின்றது. இதற்காக முதலில் பிள்ளைகளுக்கு வாசிப்பு ஒரு மகிழ்ச்சியான செயல் என உணர்த்துவதுடன் அதற்காக சில வசதி வாய்ப்புகளை பெற்றோரும் ஆசிரியர்களும் ஏற்படுத்தித் தர வேண்டும். அதனூடாக சிறந்த பிரஜைகளைக் கொண்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே அனைவரதும் அவாவாகும்.

தற்போதைய பிள்ளைகள் மற்றும் மக்களிடம் வாசிப்பு ஆர்வம் குறைந்து காணப்படுவதாகவும், நவீன தொழில்நுட்பத்துடன் சமூகத்தை பீடித்துள்ள சமூக ஊடகங்கள் அதற்கு காரணமாக இருப்பதாகவும் மீளவும் புத்தகங்களை வாசிப்பதில் மாணவர்களை ஈடுபடுத்தி இலக்கிய இரசனையுடைய, அறிவுமிக்க சமூகத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

# போதையில்லா வளமான பூமி

மஹேஸ் கீர்த்திரத்ன



ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி உலக சிறுவர் தினத்தையொட்டி, உக்குவெல பிரதேச பொதுச் செயலாளர் என். கே. சேரசிங்கவின் வழிகாட்டலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட 'போதையில்லா வளமான பூமி' எனும் போதைப்பொருள் தடுப்பு நிகழ்ச்சி, ஓவிலிகந்தையில் வித்தியாலயத்தில் நடைபெற்றது.

தேசிய போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் மாவட்ட ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர் தினேஷ் சதுரங்க, உக்குவெல பிரதேச செயலகத்தின் போதைப்பொருள் தடுப்பு மற்றும் புனர்வாழ்வு உத்தியோகத்தர்களும் இதற்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

# கைதியிடம் பொதியை கையளித்தவர் சிக்கினார்

ஷேன் செனவிரத்ன

தும்பர சிறைச்சாலையிலிருந்து வழக்கு விடயமாக நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதியொருவருக்கு நீதிமன்ற வளாகத்தில் வைத்து பொதியொன்றை வழங்க முயன்ற நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த கைதி, கையில் விலங்குடன் வரிசையில் நீதிமன்ற வளாகத்துக்குள் அழைத்துச் செல்லப்பட்ட போது, சந்தேகநபர் பொதி ஒன்றை வழங்க முயன்றுள்ளதை சிறைச்சாலை அதிகாரியொருவர் கண்டுள்ளார்.

பின்னர், அந்தப் பொதியை பரிசோதித்த போது, அதற்குள் இரண்டு கைபேசிகள், சிம் அட்டைகள் ஐந்து, புகையிலை என்பன வைக்கப்பட்டிருந்ததாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரிடம் விசாரணைகளை முன்னெடுத்த போது பெண்ணொருவர் குறித்த பொதியை கைதியிடம் வழங்குமாறு கூறி தன்னிடம் கையளித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பதுங்கிய சிறுத்தை பத்திரமாகப் பிடிக்கப்பட்டது

எஸ்.கணேசன்

கொட்டகலை, திம்புளை, பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மவுண்ட்வேர்ணன் தோட்டத்தின் வட்டக்கான் பிரிவிலுள்ள வீடொன்றுக்குள் சிக்கிய சிறுத்தை, சுமார் 5 மணிநேர கூட்டு நடவடிக்கையின் பின்னர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளது.

நேற்று (05) அதிகாலை இந்தச் சிறுத்தை வீடொன்றின் பின்புறம் பதுங்கியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரந்தெனிகல மிருக வைத்தியசாலையின் அதிகாரிகள் குழுவொன்றும், நுவரெலியா வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளும் இணைந்தே, குறித்த



சிறுத்தையைப் பிடிப்பதற்கான நடவடிக்கையில் இறங்கினர்.

குறித்த கூட்டு நடவடிக்கை வெற்றிகரமாக முடியும் வரை பிரதேசத்துக்கு தேவையான பாதுகாப்பை திம்புளை, பத்தனை பொலிஸார் வழங்கினர்.

சுமார் 4 அடி நீளமான, ஒரு வயதான இந்த ஆண் சிறுத்தை, நாயொன்றை வேட்டையாட வந்தவேளை, வீட்டின் பின்பகுதியில் உள்ள அறைக்குள் விழுந்து அதற்குள் சிக்கியிருக்கலாம் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்கப்பட்டுள்ள சிறுத்தை, ரந்தெனிகல மிருக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

அதன் உடல் நிலை பரிசோதிக்கப்பட்ட பின்னர், குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் அது பாதுகாப்பாக வனப்பகுதியில் விடுவிக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அயோத்திக்கு பயணமாகியுள்ள

# சீதையம்மன் கோவில் நிர்வாக குழுவினர்

டி.ஷங்கீதன்

நுவரெலியா, சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் கோவில் நிர்வாக சபை உறுப்பினர்கள் குழு, இந்தியாவின் புதுடெல்லி ரோட்டறி கழகத்தின் அழைப்பின் பேரில் அயோத்திக்கு பயணமாகியுள்ளனர்.

இவ்வாறு பயணமானவர்கள், இலங்கையின் சுற்றுலாத்துறை மேம்படுத்தல் மற்றும் சீதையம்மன் கோவிலின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளனர்.

கோவிலின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் சென்று இந்தக் குழுவில், ஆலயத்தின் செயலாளர் முரளீந்திரகுமார் உள்ளிட்ட பலர் இணைந்துள்ளனர்.



இவர்கள் இந்தியாவில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் அயோத்தியில் அமைக்கப்பட்டு வருகின்ற இராமர் கோவிலின் நிர்வாக சபை உறுப்பினர்களை சந்தித்து சீதையம்மன் கோவிலின் அபிவிருத்தி, அதனை மையப்படுத்திய இந்திய சுற்றுலா பயணிகளை இலங்கைக்கு அழைத்து வருவது தொடர்பான பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளனர்.

மேலும், புதுடெல்லி ரோட்டறி கழக உறுப்பினர்களையும் லக்னோ ரோட்டறி கழக உறுப்பினர்களையும் சந்தித்து, இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு அவர்களால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் அதற்கு சீதையம்மன் கோவில் சார்பாக அவர்களுக்கு வழங்கப்படவுள்ள ஒத்துழைப்பு தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்டு அதற்கான திட்டம் அமைப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கையில் இருந்து சென்றுள்ள குழுவினர் நேற்று முன்தினம் புதுடெல்லியில் அமைந்துள்ள இந்தியாவுக்கான இலங்கையின் பதில் தூதவர் உட்பட தூதரக அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடி, சீதையம்மன் கோவிலின் நினைவுச் சின்னம் ஒன்றையும் வழங்கினர்.

# சமூகத்தையே வாட்டிவதைக்கும் 'சமூகப் பாதுகாப்பு வரி'

எவ்வாறான நெருக்கடிகள் ஏற்பட்டாலும், சாதாரண மக்களே பலிக்கடாக்களாக ஆக்கப்படுகின்றனர். நாட்டில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு உரிய தீர்வு காணப்படாமலே, இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டு செல்கின்றது. அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால்தான், பொருளாதார பிரச்சினையை தீர்க்கலாம் என்றொரு விம்பத்தை காண்பித்து, அரசியல் சித்துவிளையாட்டை இவ்வரசாங்கம் விளையாடிக் கொண்டிருக்கின்றது.

பொருளாதார நெருக்கடிக்கு, டொலர் கிடைக்காமை, ஏற்றுமதி பாதிப்பு, கட்டுக்கடங்காத இறக்குமதி, அந்நியசெலாவணி கையிருப்பில் குறைந்துள்ளமை, உக்ரேன்-ரஷ்யா யுத்தம் உள்ளிட்டவை பிரதான காரணங்களாகக் காண்பிக்கப்படுகின்றன.

இவற்றால், நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி, மக்களின் கழுத்தை நெரித்துக்கொண்டு நிற்கின்றது. இதற்கிடையே நேரடியான மற்றும் மறைமுக வரிகளை அறிமுகப்படுத்தும் அரசாங்கம், மக்கள் மீது சுமைகளை கண்மூடித்தனமாகத் திணித்துள்ளது. இதற்கிடையே, சமூகப் பாதுகாப்பு வரியை அறிமுகப்படுத்தி, மக்களை வாட்டி வதைத்துக்கொண்டிருக்கின்றது.

'வரி' என்பது ஒவ்வொருவரும் முணுமுணுக்கும் வார்த்தையாகிறது. கண்டி இராசதானியில் அறவிடப்படாத எந்தவொரு வரியும் இல்லையாம். நமது நாட்டை பொறுத்தவரையில், நிகழ்கால யதார்த்தத்தில் மட்டுமன்றி, வரலாற்றிலும் வரி முறைமைக்கு பெயர்பெற்றே இருந்திருக்கின்றது.

1848களில் உடலுக்கு வரி, நாய் வரி உள்ளிட்ட ஏழு வரிகள் அறவிடப்பட்டுள்ளன. பெண்களின் மார்பகங்களுக்கான 'முலைவரி' கேரளாவில் இருந்துள்ளது. அது, 'முலை வரியல்ல', 'முளை வரி'; அதாவது, விளைச்சலுக்கான வரி எனப் பின்னைய நாள்களில் விளக்கமளிக்கப்பட்டது.

ஆங்கிலேயரின் ஆட்சியில் அறவிடப்பட்ட 2 ரூபாய் உடல் வரியை வழங்காத, ஆண்களுக்கு நடுவீதியில் இரண்டு நாள்கள் கற்கள் உடைக்கவேண்டும். கைகளில் கொப்புளங்கள் பழுத்தாலும் கையிலேந்தியிருக்கும் சம்மட்டியை கீழே வைக்கமுடியாது. சாப்பாட்டுக்கு அரைமணிநேரம் இடைவேளை; அவ்வளவுக்கு ஆங்கிலேயரின் சட்டம் கடுமையாக இருந்தது.

அதேபோன்றுதான் தற்போது நேரடி, மறைமுக வரிகள் திணிக்கப்படுகின்றன. இதனால் பொருட்களின் விலைகள், சேவைகளின் கட்டணங்கள் எகிறிகொண்டே போகின்றன.

ஒருசில பொருட்களுக்கான விலைகளை ஆயிரம் ரூபாய்ளில் அதிகரித்த அரசாங்கம், நூறு ரூபாய் அல்லது அதற்கும் குறைந்த இரண்டிலக்கங்களில் குறைத்து, மக்களை ஏமாற்றி வருகின்றது.

வேலைவாய்ப்பு இன்மை, குறைந்தளவான சம்பளம், கொடுப்பனவுகளோ, மேலதிக கொடுப்பனவுகளோ இல்லாமல் பொருட்களின் விலை அதிகரிப்பால் மக்கள் திண்டாடுகின்றனர்.

ஆகையால், வரிகளுக்கு மேல் வரிகளை விதிப்பதால், மக்கள் படும் துன்பங்கள் ஏராளம். இதில் மறைமுக வரிகளுக்கு குறைவே இல்லை. அண்மையில் அறிமுகப்படுத்தியிருக்கும் 'சமூகப் பாதுகாப்பு வரி' முழு சமூகத்தையும் வாட்டி வதைக்கும் வரியாக இருகிறது என்பது மட்டுமே உண்மையாகும்.

ஆகையால், சாதாரண மக்களின் மீதான சுமையை அதிகரிக்கும் வரிகளை அகற்றிவிட்டு, வரி ஏய்போர்களை இலக்காகக் கொள்வதே சாலச் சிறந்தது.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

அலுவலகத்தில் புதிதா கடமைக்கு வந்த அலுவலர்கள், தங்கள் வேலை மிகவும் கஷ்டமானது என எண்ணிக் கொள்வார்கள். ஆனால், காலங்கள் செல்லச் செல்ல, கடமைகளில் திறமையானவர்களாக மாறிவிடுகின்றார்கள்.

ஆனால், சிலர் தங்கள் கருமங்களில் ஆர்வம் இன்மையால், தொழிலில் முன்னேற்றம் அடையாமல், இருந்துவிடுகின்றார்கள்.

இவர்களுக்குப் பின்னர், வேலைக்குச் சேர்ந்த புதியவர்கள், ஆர்வத்துடன் கடமைகளைச் செய்தமையால், தமக்கு முன்னர் நியமனம் பெற்றவர்களைவிட, உயர்பதவிகளை பெற்றுவிடுகின்றனர்.

எல்லோரும் திறமைசாலிகளாக உயர முடியும். தொடர்ச்சியான முயலுகைகள் அவசியமானவை. செய்யும் தொழிலை நேசித்தால், எந்தச் சுமையான கடமைகளும் சுவாரஸ்யமாக மாறிவிடும்.

சொந்தப் பிரச்சினைகளை அலுவலகத்துக்குச் சுமத்தலாகாது. தொழில் எமது உயிருக்கு மேலானது. சமூகத்துக்கும் குடும்பநலனுக்கும் ஆற்றும் நற்செயல்களே, முன்னேற்றத்துக்கு இட்டுச்செல்லும். முழுமையான இரசனையுடனும் ஈடுபாட்டுடனும் காரியங்களை ஆற்றுக!

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# 'ஏன் குப்பி கடிக்கவில்லை?' எனும் அச்சுறுத்தும் கேள்வி



புருஜோத்தமன் தங்கமயில்

முன்னாள் போராளிகளை நோக்கி, தமிழ்ச் சூழலிலுள்ள பல தரப்புகளாலும், கடந்த 13 ஆண்டுகளாக பல்வேறு சந்தர்ப்பங்களில், "... முள்ளிவாய்க்காலில் நீங்கள் ஏன் குப்பி கடிக்கவில்லை? தலைவர் பிரபாகரன் போராடி வீழ்ந்த போது, நீங்கள் எல்லாம் ஏன் தப்பி ஓடினீர்கள்..." என்பது மாதிரியான கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன.

அண்மையில் கூட, தியாகி திலீபனின் நினைவேந்தல் நிகழ்வில் குழப்பம் விளைவித்தவர்களும் அவர்களின் ஆதரவாளர்களும் கூட, அது தொடர்பிலான விவாதங்களின் போது, முன்னாள் போராளிகளை நோக்கி, "நீங்கள் ஏன் குப்பி கடிக்கவில்லை; குப்பி கடிக்காத நீங்கள் எல்லாம் முன்னாள் போராளிகள் என்று சொல்லிக் கொள்ளும் அருகதை ஆற்றவர்கள்..." என்ற மாதிரியான வாதங்களை முன்வைத்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

'ஏன் குப்பி கடிக்கவில்லை' என்ற கேள்வி கேட்கப்படும் போதெல்லாம், ஈழத் தமிழ்ச் சமூகத்தில் குறிப்பிட்டளவான தரப்புகளிடம் 'குற்ற உணர்ச்சி' என்கிற, மனிதனின் அடிப்படை பகுத்தறிவுசார் உணர்வு இல்லை என்ற உண்மை, முகத்தில் அறையும்.

அடக்குமுறைக்கு எதிராகத் தொடர்ச்சியாகப் போராடி வரும் சமூகத்துக்குள், இவ்வாறான தரப்புகள் இருப்பது என்பது, தமிழ்ச் சமூகத்தின் பெரும் சாபக்கேடு. ஏனெனில், 'குற்ற உணர்ச்சி'தான் மனிதனை விலங்குக் கூட்டத்திலேயே மேன்மையான இடத்தில் வைப்பதற்கான காரணங்களில் முக்கியமானது.

காடுகளில் இருந்து நீர்நிலைகளின் கரைகளின் வழியாக, மனித நாகரிகம் வளர்ந்து வந்த போது, சமூகங்களாக வாழ்வதற்கான உந்துதல்களில் 'குற்ற உணர்ச்சி' என்கிற உணர்வும், முக்கிய இடத்தை வகித்தது.

'குற்ற உணர்ச்சி' இல்லையென்றால், மனித இனம் எப்போதோ தங்களுக்குள் அடித்துக் கொண்டு முழுவதுமாக அழிந்து போயிருக்கும். 'குற்ற உணர்ச்சி'யே, மனிதனை இன்றைய ஓரளவான நாகரிக ஒழுங்குகளுக்குள் கொண்டு வந்து சேர்த்தது.

முள்ளிவாய்க்கால் முடிவு, தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தின் பெரும் பின்னடைவு. இந்தப் பெரும் பின்னடைவில் இருந்து மீண்டெழுவதற்கு, எவ்வளவுதான் சிரத்தை எடுத்துச் செயற்பட்டாலும், இன்னும் பல ஆண்டுகள் தேவைப்படும். இதனை ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகமும் உணர்ந்து கொண்டிருக்கின்றது.

ஆனால், முள்ளிவாய்க்கால் முடிவு விட்டுச் சென்ற 'முன்னாள் போராளிகள்' எனும் அடையாளம் கொண்ட இன விடுதலை வீரர்களை, தீண்டத்தகாதவர்களாக தமிழ்ச் சமூகம் நோக்கி வருகின்றது.

ஆயுதப் போராட்டங்களின் வீழ்ச்சி, போர்க் கைதிகளை, முன்னாள் போராளிகளை உலகம் பூராவும் பல சந்தர்ப்பங்களில் உருவாக்கி இருக்கின்றது. போராடிய அனைவரும் போர்க்களத்தில் மாண்டு வீழ்வதில்லை; அது நிகழவும் வாய்ப்பில்லை.

அதுபோல, போராடச் சென்றவர்கள், போராட்டம் தோல்வியடைந்தால், உயிருடன் திரும்பக் கூடாது என்று நினைப்பதெல்லாம் மிருகத்தனமான உணர்வு. அதுதான் 'குற்ற உணர்ச்சி' அற்ற நிலை. அதனால்தான், முன்னாள் போராளிகளை நோக்கி, அரச உளவாளிகள் என்கிற அடையாளமும் "ஏன் குப்பி கடிக்கவில்லை" என்ற கேள்வியும் முன்வைக்கப்படுவதற்கு காரணமாகும்.

அதிக தருணங்களில், முன்னாள் போராளிகளை நோக்கி, இவ்வாறான கேள்விகளை முன்வைப்பவர்கள் யார் என்று பார்த்தால், அவர்கள் ஆயுதப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அதில் எந்தவித பங்களிப்பும் செய்யாமல், பவ்வியமாக பாடசாலைக்கும் தனியார் வகுப்புகளுக்கும் சென்று, தங்களின் எதிர்கால வாழ்க்கைக்கான அஸ்திவாரத்தை இட்டவர்கள். அல்லது, யாழ்ப்பாணத்திலோ, கொழும்பிலோ பெற்றோரோடு பாதுகாப்பாக இருந்து கொண்டு, புலம்பெயரும் கனவைச் சுமந்தவர்கள். பாடசாலைகளிலோ, தனியார் வகுப்புகளிலோ விடுதலைப் புலிகளின் ஆட்சேர்ப்பு கூட்டங்களை கேட்கக்கூட தயங்கியவர்கள். அந்தச் சந்தர்ப்பங்களில் மதில், வேலிகள் பாய்ந்து ஒழுங்கைகளுக்குள்ளால் வீடுகளுக்கு ஓடியவர்கள்.

இவர்களை ஒத்தவர்கள் போராட்டக்களத்தில் இருக்கின்ற போது, இவர்கள் பல்கலைக்கழகங்களில் கற்றுக் கொண்டிருந்தார்கள்; அல்லது, புலம்பெயரும் முயற்சிக்காக கொழும்பில் நின்றவர்கள். இவர்களோ, இவர்களின் பெற்றோரோ ஆயுதப் போராட்டத்தையோ, அதனை இறுதி வரை நடத்திய விடுதலைப் புலிகளையோ, மனதுக்குள் நாள்தோறும் திட்டித்தீர்த்துக் கொண்டிருந்தவர்கள்.

ஆனால், புலிகளின் வீழ்ச்சி, போராட்டக்காலங்களில் ஒளித்து ஓடியவர்களை எல்லாம், திடீர் தமிழ்த் தேசிய போராளிகள் ஆக்கிவிட்டது. அவர்களில் அதிகமானவர்கள்தான், முன்னாள் போராளிகளை நோக்கி 'துரோகிகள்', 'காட்டிக்கொடுப்பாளர்கள்' என்கிற அடையாளங்களைச் சூட்டுகிறார்கள்.

> **"போராட்டக்காலங்களில் ஒளித்து ஓடியவர்களை எல்லாம் புலிகளின் வீழ்ச்சி, திடீர் தமிழ்த் தேசிய போராளிகள் ஆக்கிவிட்டது. அவர்களில் அதிகமானவர்கள்தான், முன்னாள் போராளிகளை நோக்கி 'துரோகிகள்', 'காட்டிக்கொடுப்பாளர்கள்' என்கிற அடையாளங்களைச் சூட்டுகிறார்கள்**

வாழ்வை வளமாக்க வேண்டிய வயதில், இனவிடுதலைப் போராட்டத்துக்காக தங்களை முழுவதுமாக அர்ப்பணித்து, தெய்வாதீனமாக உயிர் மீண்டிருக்கின்ற முன்னாள் போராளிகள், இன்றைக்கு வாழ்வதற்தே வழியில்லால் இருக்கிறார்கள்.

முள்ளிவாய்க்கால் முடிவின் பின்னர், 13 ஆண்டுகள் கடந்துவிட்ட போதிலும், முன்னாள் போராளிகளை தமிழ்ச் சமூகம் ஏறெடுத்துப் பார்க்கவில்லை. அவர்களின் வாழ்வாதாரம், குடும்பம் பற்றியெல்லாம் எந்த உரையாடலும் தமிழ்ச் சூழலில், எந்தவொரு தரப்பாலும் முன்னெடுக்கப்படவில்லை. 'குற்ற உணர்ச்சி'யுள்ள சமூகமாக இருந்திருந்தால், இதுவெல்லாம் நிகழ்ந்திருக்கும்; முன்னாள் போராளிகளை ஏறெடுத்துப் பார்த்திருக்கும்.

(இந்தப் பத்தியாளரும், ஆயுதப் போராட்டம் நீடித்த காலத்தில், போராடும் வயதை அண்மித்துவிட்ட ஒருவர்; ஆனால், எதிர்கால வாழ்வு பற்றிய பயத்தால், ஆயுதப் போராட்டத்தின் திசைப் பக்கமே திரும்பவில்லை. எனினும், 'குற்ற உணர்ச்சி' என்கிற விடயம், முன்னாள் போராளிகள் பற்றிய எண்ணங்களின் போது, பிடரியில் தட்டுவதுண்டு. அதுதான், அவர்களை நோக்கி எந்தவொரு தருணத்திலும், தகுதியற்ற வார்த்தைகளை உதிர்ப்பதைத் தடுக்கின்றது.)

முள்ளிவாய்க்கால் முடிவுக்குப் பின்னர், தமிழ்த் தேசிய அரசியல், கட்சிகளிடம் முழுவதுமாகச் சென்று சேர்ந்துவிட்டது. கட்சிகளிடம் போராடும் இனமொன்றின் அரசியல் முழுவதுமாகச் சென்று சேர்ந்தால், அது ஆபத்தான கட்டங்களைத் திறந்துவிடும்.

அதுவும், அதிகார ஆசையோடும் பதவி வெறியோடும் இருக்கின்ற கட்சிகளிடம், ஓர் இனத்தின் அரசியல் சென்று சேர்ந்தால், அது அதிக தருணங்களில் அபத்தமான கட்டங்களையே கொண்டுவந்து சேர்க்கும். இன்று, தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இயங்கிக் கொண்டு இருக்கின்ற கட்சிகள், அவற்றின் ஆதரவாளர்களின் நடவடிக்கைகளைப் பார்த்தால் அது புரிந்துவிடும்.

ஆயுதப் போராட்ட காலத்தில் புலிகளுக்குப் பயந்து, பணிந்து இயங்கிய கட்சிகள் எல்லாம், புலிகளின் வீழ்ச்சிக்குக் காத்திருந்தது போலவே, இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன. அதாவது, புலிகள் மீதான போலி விசுவாசத்தை வெளியில் காட்டிக்கொண்டு, தங்களின் கட்சி அரசியலை வளர்ப்பதற்கான கட்டங்களை மாத்திரமே முன்னின்று நடத்தி வருகின்றன.

அதற்காக, புலிகளின் மாவீரர் தினம், தியாகி திலீபன் நினைவு நாள்களை எல்லாம் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன என்பதுதான், ஜீரணிக்க முடியாத விடயம்.

தேர்தல் அரசியலை நோக்கி, முன்னாள் போராளிகளில் சிலர் வந்திருக்கிறார்கள். அவர்களின் வருகையை எந்தவொரு தருணத்திலும் தமிழ்த் தேசிய கட்சிகள் இரசிக்கவில்லை. வேண்டுமென்றால், அவர்களைக் காட்டி, தமிழ் மக்களிடம் வாக்குச் சேகரிப்பதற்கே தயாராக இருக்கின்றன.

ஆனால், தேர்தல் அரசியலை நோக்கி வந்த முன்னாள் போராளிகள், அரசியல் விவாதங்களில் ஈடுபடுவதையோ, நினைவேந்தல்களை கட்சிகள், அமைப்புகள் கைப்பற்ற முயற்சிப்பதையோ கேள்விக்கு உள்ளாக்கினால், அவர்களை நோக்கி, 'குப்பி கடிக்காதவர்கள்'; 'இனத் துரோகிகள்'; 'இவர்களுக்கு தமிழ்த் தேசிய அரசியலுக்குள் இடமில்லை' போன்ற விடயங்கள் பேசப்படுகின்றன.

தேர்தல் அரசியலை நோக்கி வந்த முன்னாள் போராளிகளும் கூட, தமிழ் மக்களின் பொது நிலைவேந்தல்களாக கொள்ளப்படக் கூடிய எதையும் தனித்து, தமக்கானது என்று உரிமை கோரத் தேவையில்லை; அது ஏற்புடையதும் இல்லை. அவ்வாறான சிந்தனையுடையவர்கள் அதனை மாற்றிக் கொள்ள வேண்டும்.

முன்னாள் போராளிகளை நோக்கி, 'ஏன் குப்பி கடிக்கவில்லை' என்ற கேள்வியை யார் எழுப்புகிறார்களோ, அவர்கள் தமிழ்ச் சமூகத்தின் பெரும் அவமானச் சின்னங்கள்.

ஏனெனில், அவர்களிடம் 'குற்ற உணர்ச்சி' என்ற மனிதனுக்கு அவசியமான உணர்வு இருக்க வாய்ப்பில்லை.

'குற்ற உணர்ச்சி'யும் அதுசார் மனித இயக்கமும் இல்லாத யாரும், போராடும் சமூகங்களில் இருக்க முடியாது. நீதிக்கான கோரிக்கைதான், போராட்டங்களில் அடிப்படை. அதனை உணர்ந்து கொள்வதற்கு 'குற்ற உணர்ச்சி' மிகவும் அவசியமானது.

## கடிதங்கள்

### வட்டுவாகல் பாலத்தை உடனடியாக புனரமைக்கவும்



முல்லைத்தீவு, வட்டுவாகல் பாலம் தாழிறங்கி உள்ளமையால், இந்த வீதியால் பயணிப்பவர்கள் மிகுந்த அவதானத்துடன் பயணிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் நகருக்குள் நுழையும் பிரதான வீதியான முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு வீதியின் முதன்மையான பாலமான வட்டுவாகல் பாலம், நீண்டகாலமாக புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இது குறித்து, பல தடவைகள் அதிகாரிகளுக்கும் அரசியல்வாதிகளுக்கும் சுட்டிக்காட்டப்பட்டு, கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் நிரந்தரமான புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை.

பாலத்தில் அவ்வப்போது ஏற்படும் வெடிப்புகள், பாதிப்புகள் என்பன சீர்செய்யப்பட்டு வருகின்ற நிலையில், தற்போது பாலத்தின் ஒருபகுதியில், வீதி தாழிறங்கிக் காணப்படுகின்றது. இது, பாலம் பாதுகாப்பற்றதாகக் காணப்படுகின்றது என்பதன் அறிகுறி என, பாலத்தின் ஊடாகப் பயணிப்பவர்கள் பலரும் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

எனவே, குறித்த வீதியால் பயணிப்பவர்கள் மிகுந்த அவதானமாக செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நீண்டகாலமாக, வட்டுவாகல் பாலம் புனரமைக்கப்படாத நிலையில், தொடர்சியாக கடற்றொழிலாளர்கள், பொதுமக்கள் என்போர், இந்தப் பாலத்தை புனரமைக்க கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

செ. கீதாஞ்சன்



# ‘எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான்’

## இன்று சர்வதேச ஆசிரியர் தினம்



நடராஜன் மிருணாளினி

‘எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான்’. நமக்கு எழுத்து மற்றும் எண்களை எமது கைகளால் எழுதுவதற்கு அறிவைத்தந்த அந்த மனிதர், உலகில் இறைவனுக்கு நிகராக உவமிக்கப்படுகிறார்.

மாணவர்களாகப் பாடசாலைக்கு வரும் சிறுவர்களுக்கு ஒழுக்கம், நல்ல பழக்க வழக்கம், படிப்பு என அறிவுக் கண்ணை திறந்து வைத்து, அவர்களை சாதனையாளர்களாக்குவது ஆசிரியர்களே! அவர்களைக் கொண்டாடும் நாள் இன்றைய நாள் ஆகும்.

‘எங்கே நடப்படுகிறாயோ அங்கே மலராகு’ என்ற பொன்மொழிக்கு எடுத்துக்காட்டாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள் தான். தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவர்களுக்கு வாழ்க்கை என்றால் என்ன? இதில் மாணவ, மாணவி சமூகத்தின் பங்கு எப்படி இருக்க வேண்டும் என்ற தெளிவை ஆசிரியர்கள் தான் கற்றுக் கொடுக்கின்றனர்.

‘குறிக்கோள் இல்லாத வாழ்க்கை, முகவரியில்லாத கடிதத்துக்குச் சமம்’. இதுபோல் தான், மாணவ சமூகமும் குறிக்கோள், இலட்சியம் இல்லாமல் இருந்தால், எதிர்காலம் ஓர் இருண்ட பாதை என்பதை, மாணவ மனதில் நன்கு பதிய வைத்து, அதன் மூலம் கிடைக்கும் வெற்றியை பார்க்கும் பொழுது ஆசிரியர்களின் முகத்தில் மகிழ்ச்சி தோன்றும்.

தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவனை, நல்ல மாணவனாக ஆக்குவதோடு, நல்ல மனிதனாக மாற்றும் பொறுப்பும் ஆசிரியர்களுக்கு இருக்கிறது. அதேபோல், ஆசிரியர்கள் என்பவர்கள், மாணவ சமூகத்தை உருவாக்குபவர்கள் அல்ல; மாறாக, உயிரூட்டுபவர்கள். ஒரு சிறந்த ஆசிரியர்களின் பண்புகள், குணங்களை பார்க்கும் மாணவ, மாணவிகளின் மனதில் அப்படியே பதியும்; உதாரணபுருஷர்களாக உருவேற்றிக் கொள்கின்றார்கள்.

அதனால் ஆசிரியர்கள், தங்களை மாணவர்களின் காலக் கண்ணாடி என்ற எண்ணத்தில் தான் பணியாற்றி வருகின்றனர். அப்படி பணியாற்றுவதன் மூலம் கடினமாக உழைத்து, வாழ்வில் ஒளிரும் மாணவ சமூகத்துக்கு ஆசிரியர்கள் உரிமையாளர்களாக மாறுகின்றனர்.

ஒரு தேசத்தின் வளமான எதிர்காலத்தைத் தாங்கவிருக்கும் தூண்களுக்கு, வைரம் பாய்ச்சுகின்றவர்களும் இவர்களே! மாணவர்களுக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் இவர்கள், மாணவர்களின் மனதளவு நன்றிக்கும், செயலளவு மரியாதைக்கும் உரித்துடையவர்களாவர்.

மனித வரலாற்றிலிருந்து பிரிக்க முடியாத, மனித சமூகத்தின் முதுகெலும்பாக விளங்குகின்ற ‘ஆசிரியரை’ கௌரவப்படுத்தும் நோக்கில், பல்வேறு சமய கலாசார மற்றும் நிறுவன நிகழ்வுகள், ஆசிரியர்களைக் கௌரவிக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்படுகின்றன. இவை மனித நாகரிகத்தின் வளர்ச்சிப்படிகள் எனின் மிகையல்ல.

ஒக்டோபர் 06ஆம் திகதி, உலக ஆசிரியர் தினம், உலகளாவிய ரீதியில் பல்வேறு விதமாகக் கொண்டாடப்படுகின்றது. ‘யுனெஸ்கோ’ நிறுவனம் ஆசிரியரின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக, ‘ஆசிரியரின் தன்மையைக் கருத்தில் கொண்டு அங்கிகாரமளித்தல்’ என்ற கூற்றுடன், பொதுக் கல்விக்காக அல்லது சிறப்புத் துறை ஒன்றுக்காக, ஆசிரியர்களால் ஆற்றப்பட்டு வரும் பங்களிப்பை மரியாதை செய்யும் முகமாக, இவ் உலக ஆசிரியர் தினத்தை அறிவித்து, வருடாந்தம் கொண்டாடப்பட்டும் வருகின்றது.

பொதுவாக, ஆசிரியரை தெய்வீகத்தன்மையுடன் மதித்து மரியாதை செய்யும் வழக்காற்றினை ஆசிய நாடுகள் கொண்டுள்ளன. அவரவர் சமய கலாசார பின்னணிகளுக்கு ஏற்ப இதனை வெளிப்படுத்தும் விதத்தில் மாற்றங்கள் உள்ளன.

இலங்கையில் சிங்களவர், தமிழர் போன்றோர் ஆசிரியர்களுக்கு வெற்றிலை கொடுத்து, காலில் விழுந்து வணக்கம் செலுத்துவர்.

மேற்கு நாடுகளின் மாணவர்கள் தாம் அமர்ந்த இடத்தில் இருந்து கூறல் - கேட்டல் செய்வதை எவரும் குறையாகக் கருதுவதும் இல்லை. அந்தவகையில் அவர்களை கௌரவித்து, மரியாதை செய்து, நினைவு கூருவதற்கு வருடத்தில் ஒரு கணம், ஓர் ‘ஆசிரியர் தினம்’ அவசியம் தான்!

மாணவனுக்கு ஞானத்தின் சுடரை ஏற்றுகிற பணி ஆசிரியருடையது. அவர்களை நன்றியுடன் நினைவு கூரவும், அவர்களின் பணி தொடர வாழ்த்துவதுமே ஆசிரியர் தினம் கொண்டாட்டங்களின் பிரதான எதிர்பார்க்கையாகும். ‘மனிதனை மனிதனாக, உருவாக்கும் சிற்பிகள்’ என்று ஆசிரியரைச் சொல்வதுண்டு. மனிதனை முதன்மைப் படுத்த உரமாக இருப்பவர்கள் ஆசிரியர்கள் என்றால் அது மிகையாகாது.

ஆசிரியர்களின் பணியைக் கொண்டாட ஒரு தினத்தை மட்டும் ஒதுக்குவது முறையல்ல என்றும் சிலர் வாதிடுவர். ஏனெனில், இவர்களின் பணி நாள்தோறும் பல்வேறுபட்ட கோணங்களில் பல்வேறுபட்ட பரிணாமங்களை தோற்றுவித்துக் கொண்டே இருக்கின்றன. எனவே, இந்நிமிடம் வரை உலகில் நிகழும், நிகழ்த்தப்படும் மாற்றங்கள், வியப்புகள் அத்தனையும் நிகழ்த்தப்படுவது எங்கோ ஒரு மூலையில் தன்னலம் கருதாமல், ஓர் ஆசானால் உருவாக்கிய அந்த மாணவச் சமூகத்தால்தான் என்பதை வைத்தே அதனை ஒரு தினத்துக்கு மாத்திரம் மட்டுப்படுத்தக்கூடாது என்பது இவர்களின் வாதமாகும்.

> **ஒரு சமூகம், அதி உன்னத நிலை அடைந்து இருந்தால், நிச்சயமாக அதன் பின்னால் ஆசிரியர் சமூகம் இருப்பதாக அர்த்தம். ஒரு சமூகம் தாழ்ந்து போனால், ஆசிரியர் சமூகம், தனக்கான பணியை சரிவர செய்திடவில்லை என அர்த்தம்**

உலகில் வாழ்ந்த, வாழும், வாழப்போகும் ஒவ்வொரு ஜீவனுக்கும் பின்னால், ஓர் ஆசான் இருந்தான், இருக்கிறார், இருப்பார் என்பதே யதார்த்தமாகும்.

உலகில் உள்ள அனைத்து மொழிகளிலும் வார்த்தைக்கு வார்த்தை எதிர்ப்பதம் உண்டு. ஆனால், ஆசான் என்ற ஒரு வார்த்தைக்கு இலக்கண வித்தகர்கள் எதிர்மறை வார்த்தை தரவில்லை. ஒரு சமூகம், அதி உன்னத நிலை அடைந்து இருந்தால், நிச்சயமாக அதன் பின்னால் ஆசிரியர் சமூகம் இருப்பதாக அர்த்தம்.

ஒரு சமூகம் தாழ்ந்து போனால், ஆசிரியர் சமூகம், தனக்கான பணியை சரிவர செய்திடவில்லை என அர்த்தம். வேறு எந்த துறையை விடவும் அதிக பொறுப்புகளும் அதிக முக்கியத்துவமும் நிறைந்தது ஆசிரியத்துவம்.

ஒரு மாணவன், ஆசிரியரை சேரும் தருணத்தில், வெறும் மண் கலவையாய் மட்டுமே உள்ளான். அவனை தேவையான வடிவில் வார்ப்பது ஆசிரியனின் பணியாக உள்ளது. அதிலும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் உழைப்பைத்தான் நாம் அதிகம் பாராட்ட வேண்டும். சிறு குழந்தைகளுக்குச் பாடங்களை அடித்தோ, மிரட்டியோ கற்றுக் கொடுக்க முடியாது. அப்படிச் சொல்லிக் கொடுத்தாலும் அவர்களுக்கு ஏறாது.

குழந்தைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும் பொழுது அசிரியர்கள் குழந்தைகளாகவே மாறிவிட வேண்டும். அப்பொழுது தான் அவர்கள் தங்களின் முழுக்கவனத்தையும் ஆசிரியர்கள் மீது விழுத்துவார்கள்.

அதேபோல், கிராமத்தில் இருக்கும் பள்ளிகளில் பணியாற்றுவதில் கிடைக்கும் மகிழ்ச்சி சற்று வித்தியாசமானது. அங்கு ஆரம்பப் கல்வி படிக்கும் மாணவன், பின்னர் வாழ்வின் எத்தகைய உயர்ந்த நிலைக்குச் சென்றாலும் அப்பள்ளியையும் ஆசிரியர்களையும் மறப்பது இல்லை.

மாணவர்களுக்கு அதிகம் தேவைப்படுவது, என்றென்றுமான ஊக்கமும் தன்னம்பிக்கையும் நன்னெறிகளுமாகும். இதைச் சரியாக வழங்கி விட்டால், அங்கே ஆசிரியர் வேலை அதன் முழு நிறைவை எட்டியதாக அர்த்தம்.

உத்தரகாண்ட்

### திருமணத்துக்குச் சென்ற

# 25 பேர் உயிரிழப்பு

திருமணத்துக்குச் சென்ற பஸ் பள்ளத்தாக்கில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 25 பேர் உயிரிழந்த சம்பவம் உத்தரகாண்டில் இடம்பெற்றுள்ளது.

திருமண விழாவில் பங்கேற்பதற்காக, லால்தாங் பகுதியில் இருந்து பிரோன்கால் பகுதிக்கு சுமார் 50 க்கும் மேற்பட்டவர்களை ஏற்றிக் கொண்டு பயணித்த பஸ்ஸே, வேகக் கட்டுப்பாட்டை இழந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகி உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இக்கோர விபத்தில் 25 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், பலர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.





உத்தராகண்ட்

## 10 பேரின் உயிரைப் பறித்த பனிச்சரிவு; 18 பேர் மாயம்

உத்தராகண்டில் உள்ள திரௌபதி தண்டா மலை சிகரத்தில், நேற்று முன்தினம் (04) ஏற்பட்ட பயங்கர பனிச்சரிவில் சிக்கி 10 மலையேற்ற வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

நேரு மலையேற்றக் கல்லூரியை சேர்ந்த 40 வீரர்கள் செப்டெம்பர் மாதம் 23ஆம் திகதி குறித்த சிகரத்தில் ஏறத் தொடங்கியுள்ளனர்.

இரண்டு வாரங்கள் கழிந்த நிலையில், அவர்கள் சுமார் 16,000 அடியை எட்டியிருந்தனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் எதிர்பாராதவிதமாக குறித்த பகுதியில் பனிச்சரிவு ஏற்பட்டுள்ளது.

இப்பனிச்சரிவில் சிக்கி 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும், 18 பேர் மாயமாகியுள்ளனர் எனவும், அவர்களை தேடும் பணியில் பேரிடர் மீட்புப் படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் எனவும், இதுவரை 12 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதுடெல்லி

## 4 நகரங்களில் 5G ஆரம்பம்




புதுடெல்லியில் ஒக்டோபர் முதலாம் திகதி நடைபெற்ற இந்திய மொபைல் காங்கிரஸ் (IMC) மாநாட்டில் கலந்து கொண்ட பிரதமர் மோடி, இந்தியாவில் 5G இணையச் சேவையை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்நிலையில் குறித்த மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியாவின் மிகப் பெரிய தொலைத்தொடர்பு நிறுவனமான ரிலையன்ஸ் ஜியோவின் (Reliance Jio ) தலைவர் முகேஷ் அம்பானி ‘புதுடெல்லி, மும்பை, கொல்கத்தா, சென்னை உள்ளிட்ட நகரங்களில், வரும் தீபாவளிக்குள் 5G சேவையை செயற்படுத்தவுள்ளதாகவும், 2023ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்திற்குள் இந்தியா முழுவதும் 5 G சேவையை நிறுவ உள்ளதாகவும் உறுதியளித்தார்.


அந்தவகையில் ‘தசரா’ பண்டிகையை முன்னிட்டு நேற்றைய தினம் (05) மும்பை, புதுடெல்லி, கொல்கத்தா, வாரணாசியில் சோதனை அடிப்படையிலான 5ஜி சேவையை ஜியோ நிறுவனம் ஆரம்பித்து வைத்துள்ளது.

இது தொடர்பாக அந்நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘5ஜி சேவைகளைப் பெற புதிய சிம் தேவையில்லை. ஏற்கெனவே மக்கள் வைத்திருக்கும் அலைபேசிகளில் ஜியோ 5ஜியை இயக்க அலைபேசி தயாரிப்பாளர்களுடன் இணைந்து ஜியோ நிறுவனம் பணியாற்றி வருகின்றது.

அத்துடன், ஏனைய நகரங்களுக்கான 5ஜி சேவையானது படிப்படியாகச் சோதனை அடிப்படையில் அமல்படுத்தப்படும்’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி

## ஆபாசப் படம் பார்த்தவருக்கு நேர்ந்த விபரீதம்



கிருஷ்ணகிரியில் நகைக் கடையொன்றில் பணியாற்றி வரும் ஊழியர் ஒருவரிடம், மர்ம நபர்கள் சிலர் அலைபேசியில் தொடர்பு கொண்டு, “சென்னை சைபர் கிரைம் பொலிஸ் பிரிவில் இருந்து பேசுகின்றோம். நீங்கள் அலைபேசியில் சிறுவர்களின் ஆபாசப் படம் பார்த்துள்ளதாகப் புகார் வந்துள்ளது” எனத் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் இந்தக் குற்றத்தில் இருந்து தப்ப வேண்டுமானால் 10,000 ரூபாய் தர வேண்டும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இதனால் அச்சமடைந்த குறித்த நபர் ‘Phone Pay ‘ எனும் செயலி மூலம் பணத்தை அனுப்பியுள்ளார்.

இதனையடுத்து குறித்த மர்ம நபர்களை அவர் மீண்டும் தொடர்பு கொள்ள முயன்றபோது குறித்த அலைபேசியின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த அந்நபர் இதுகுறித்து பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இதனையடுத்து போலி முகவரி கொடுத்து சிம்கார்ட் வாங்கிய தர்மபுரி மாவட்டத்தைச் சேர்ந்த 4 பேரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## துப்பாக்கி முனையில் கடத்தப்பட்ட இந்திய குடும்பம்



அமெரிக்காவில் இந்திய குடும்பமொன்றை, மர்ம நபர்கள் சிலர் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவில், கலிபோர்னியா மாகாணத்தில் உள்ள சென்ட்ரல் வெலி பகுதியில் வசித்து வருபவர் 36 வயதான ஜஸ்தீப் சிங் இந்தியாவை பூர்வீகமாகக் கொண்டவர். இவர், தனது மனைவி ஜாஸ்லீன் கவூர், எட்டு மாத குழந்தை மற்றும் உறவினர் அமந்தீப் சிங் ஆகியோருடன் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (04) மர்ம நபர்கள் சிலர் ஜஸ்தீப் சிங் மற்றும் அவரது குடும்பத்தினரை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், இது குறித்து அந்நாட்டுப் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## சமஸ்கிருதத்தில் கிரிக்கெட் வர்ணனை: சிறுவர்களுக்கு பிரதமர் வாழ்த்து




சிறுவர்களின் கிரிக்கெட் வர்ணனை வீடியோவொன்று இணையத்தில் வைரலாகி வருகின்றது.

பெங்களூரில் குடியிருப்பு பகுதியொன்றில் எடுக்கப்பட்ட குறித்த வீடியோவில், சிறுவர்கள் சிலர் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருப்பதும், சிறுவனொருவன் அதனை சமஸ்கிருதத்தில் வர்ணனை செய்வதும் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் இவ்வீடியோ சமூக வலைதளங்களில் வைரலானதைத் தொடர்ந்து, இந்தியப் பிரதமர் மோடி, குறித்த சிறுவர்களுக்கு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது டுவிட்டரில், “இதைக் காண மனதுக்கு மகிழ்ச்சியாகவுள்ளது. இம் முயற்சியை மேற்கொண்டவர்களுக்கு வாழ்த்துக்கள்” எனத் தெரிவித்துள்ளார்.

## மோடியின் கோரிக்கையை மறுத்த உக்ரேன் ஜனாதிபதி



நேட்டோ படையுடன் உக்ரேன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, ரஷ்யா பெப்ரவரி மாதம் முதல் உக்ரேன் மீது தாக்குதல் நடத்தி வருகின்றது.


அதே சமயம் உக்ரேனும் பதில் தாக்குதல் நடத்தி வருகின்றது. இப்போரில் இருதரப்பில் இருந்தும் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அண்மையில் உக்ரேன் ஜனாதிபதி வொலோடிமிர் செலென்ஸ்கியை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பிரதமர் மோடி, “ரஷ்யா-உக்ரேன் போரில் அணுசக்தி நிலையங்களுக்கு ஆபத்து ஏற்படுவது, சுற்றுச்சூழலுக்கு பேரழிவு விளைவுகளை ஏற்படுத்தும். போரை நிறுத்துவதற்கு இராணுவம் மூலம் தீர்வு காண முடியாது. தூதரக ரீதியிலான பேச்சுவார்த்தையைத் தொடங்குவது அவசியம்” எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

இந்நிலையில்உ“க்ரேனின் நான்கு நகரங்களை சட்டவிரோதமாக ரஷ்யா இணைத்துள்ள சூழலில், ரஷ்யாவுடன் எந்தப் பேச்சுவார்த்தையும் நடத்த உக்ரேன் தயாராக இல்லை” என செலென்ஸ்கி பதிலளித்துள்ளார்.

மேலும், உக்ரேனுக்கு இந்தியா அளித்து வரும் ஆதரவுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

# 'சார்ஜர்களின்' பயன்பாடு குறித்து புதிய சட்டம்



ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில், பல வகையான சார்ஜர்களின் பயன்பாட்டை நிறுத்தும் வகையில் புதிய சட்டமொன்று இயற்றப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், ஸ்மார்ட் தொலைபேசிகள் மற்றும் டப்லெட்டுகள் உட்பட பல்வேறு மின்னணு சாதனங்களுக்குப் பொதுவான சார்ஜர்களை (மின்னேற்றி) பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தின் செய்திக்குறிப்பில் "புதிய சட்டத்திற்கு ஆதரவாக 602 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும் பதிவாகியுள்ளன. 8 உறுப்பினர்கள் புறக்கணிப்புச் செய்துள்ளனர்.

இதற்கு அமைவாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் 2024 ஆம் ஆண்டு முதல், யுஎஸ்பி (USB) டைப்- C வகை சார்ஜர்களே பயன்படுத்தப்படும்.

எனவே இனி தயாரிக்கப்படும் கேபிள் வழியாக சார்ஜ் செய்யக்கூடிய 100 வோட்ஸ் வரை மின்திறன் கொண்ட அனைத்து 'புதிய தொலைபேசிகள், டப்லெட்டுகள், டிஜிட்டல் கெமராக்கள், ஹெட்போன்கள் ,ஹெட்செட்கள், போர்ட்டபிள் ஸ்பீக்கர்கள், இயர்பட்கள் மற்றும் மடிக்கணினிகளில்' USB Type C வகை சார்ஜிங் போர்ட் (குதை ) பொருத்தப்பட்டிருக்க வேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்னணு கழிவுகளைக் குறைக்கவும், நுகர்வோரை மேம்படுத்தவுமே இப் புதிய சட்டம் இயற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பயன்படுத்தப்படாத சார்ஜர்களால், ஆண்டுக்கு சுமார் 11,000 தொன் மின் கழிவுகள் வெளியேறுகின்றன. ஆகவே இந்நடவடிக்கை, சுற்றுச்சூழலுக்கும் நுகர்வோருக்கும் நன்மை பயக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈராக்

## ஈராக்கில் குண்டு மழை பொழிந்த துருக்கி

### 23 பேர் உயிரிழப்பு



ஈராக்கில் துருக்கி படையினர் மேற்கொண்ட வான்வழி தாக்குதலில் 23 குர்தீஸ் தீவிரவாதிகள் உயிரிழந்துள்ளர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஈராக்கின் வடபகுதியில் இருக்கும் பல நகர்களை குர்திஸ்தான் பிராந்திய அரசாங்கம் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளது.

இந்நிலையில் இதனை ஆண்டு வரும் குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியை, துருக்கி, தீவிரவாத இயக்கமாக அறிவித்ததோடு, அவ் இயக்கத்திற்கு எதிரான தாக்குதல்களையும் மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில் ஈராக்கின் வடபகுதியில் இருக்கும் அசோஸ் என்ற குர்திஸ் பிராந்தியத்திற்குள் அண்மையில் துருக்கிப் படையின் வான்வழித் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

அமெரிக்கா

## பச்சை ஆடையில் கொள்ளை




அமெரிக்காவின் பிரசித்தி பெற்ற டைம்ஸ் சதுக்க சுரங்க ரயிலுக்குள் ஏறிய ஆறு பெண்கள், அங்கிருந்த பயணிகளின் உடமைகளைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2 ஆம் திகதி இடம்பெற்ற இச் சம்பவத்தின் போது, பச்சை நிற வேற்றுக்கிரக வாசிகளைப் போல் உடலை இறுக்கிய ஜம்ப்சூட் ஆடையில் வந்த குறித்த பெண்கள் , ரயிலில் தனியாக இருந்த சிலரைத் தாக்கி அவர்களது உடமைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா

## உயிரை எடுக்கத் தயாரில்லை; உயிரை மாய்த்த இசைக் கலைஞர்



உக்ரேன் மீது ரஷ்யா கடந்த 7 மாதங்களுக்கு மேலாகத் தாக்குதல் நடத்தி வருகின்றது.

இந்நிலையில் இப்போரில் பங்கேற்க 3 லட்சம் ரஷ்யர்களை அணி திரட்டுமாறு ரஷ்ய ஜனாதிபதி புடின் கடந்த சில தினங்களுக்கும் முன்னர் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து இராணுவத்தில் பணியாற்ற அழைப்பு விடுக்கப்பட்ட பிரபல ரேப் இசை கலைஞர் இவான் விடாலிவிக் (Ivan Vitalievich) மாடியிலிருந்து குதித்து தன் உயிரை மாய்த்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இவான் விடாலிவிக் இறப்பதற்கு முன்னர் "ரஷ்ய இராணுவத்தில் சேர்ந்து ஒருவரின் உயிரை எடுக்கத் தான் தயாரில்லை" எனக்கூறி வீடியோ வொன்றையும் வெளியிட்டுள்ளார் .

இச்சம்பவம் உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது.

பங்களாதேஷ்

## இருளில் மூழ்கிய பங்களாதேஷ்

பங்களாதேஷில் தொழில்நுட்ப கோளாறு காரணமாக தலை நகர் டாக்கா உள்ளிட்ட பல முக்கிய நகரங்களில் நேற்றுமுன்தினம் (04) மின்தடை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் மின் தடை காரணமாக சுமார் 13 மில்லியன் மக்கள் பாதிப்படைந்துள்ளனர் எனவும், இதனை சீரமைக்கும் பணியில் ஊழியர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர் எனவும் அந்நாட்டு மின்சார சபை தெரிவித்துள்ளது.



பாகிஸ்தான்

## தண்ணீருக்குப் பதிலாக அசிட்டை வழங்கிய உணவகம்

பாகிஸ்தானின், லாகூர் நகரில் இயங்கி வரும் உணவகமொன்றுக்கு அண்மையில் முஹம்மது என்பவர் தனது குடும்பத்துடன் சென்றுள்ளார்.

இதன்போது அவர்களுக்கு உணவக ஊழியர்கள் தண்ணீர் போத்தல்களை வழங்கியுள்ளனர்.

### மூன்றாவது இருபதுக்கு – 20 சர்வதேசப் போட்டியில்

# இந்தியாவை வீழ்த்திய தென்னாபிரிக்கா



இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது இருபதுக்கு □ 20 சர்வதேசப் போட்டியில் தென்னாபிரிக்கா வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், இந்தூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் றோஹித் ஷர்மா, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, றீலி றொஸோவின் ஆட்டமிழக்காத 100 (48), குயின்டன் டி கொக்கின் 68 (43), டேவிட் மில்லரின் ஆட்டமிழக்காத 19 (05) ஓட்டங்களுடன் 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், 4-0-35-0 என்ற பெறுதியை இரவிச்சந்திரன் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 228 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்தியா ஆரம்பத்திலேயே ஷர்மா, ஷ்ரேயாஸ் ஐயரை ககிஸோ றபாடா, வெய்ன் பார்னலிடம் இழந்ததுடன், பின்னர் குறிப்பிட்ட இடைவெளிகளில் றிஷப் பண்ட் 27 (14), தினேஷ் கார்த்திக் 46 (21) ஓட்டங்களுடன் லுங்கி என்கிடி, கேஷவ் மஹராஜ்ஜிடம் வீழ்ந்தனர்.

தொடர்ந்து சூரியகுமார் யாதவ், ஹர்ஷால் பட்டேல், அக்ஸர் பட்டேல், இரவிச்சந்திரன் அஷ்வின் முறையே டுவைன் பிறிட்டோறியஸ், என்கிடி, பார்னல், மஹராஜ்ஜிடம் வீழ்ந்தனர்.

இறுதியில் 31 (17) ஓட்டங்களைப் பெற்ற தீபக் சஹர், மொஹமட் சிராஜ் ஆகியோர் பிறிட்டோறியஸிடம் வீழ்ந்த நிலையில் 18.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்ற இந்தியா 49 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. பந்துவீச்சில், பிறிட்டோறியஸ் 3.3-0-26-3, மஹராஜ் 4-0-34-2, றபாடா 4-0-24-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக றொஸோவும், தொடரின் நாயகனாக சூரியகுமார் யாதவ் தெரிவாகினர்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரானது, லக்னோவில் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.



## புதிய கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களை உருவாக்கும் செயற்திட்டம்

எம்.யூ.எம். சனூன்

புத்தளம் நகர சபைத் தலைவரும், புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவருமான எம்.எஸ். எம். ரபீக்கின் ஏற்பாட்டில், புதிய கால்பந்தாட்ட மத்தியஸ்தர்களை உருவாக்குவதற்கான ஆரம்ப செயலமர்வானது அவரது தலைமையில், புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்றது.

சம்மேளனத்தின் செயலாளர் கலாநிதி எஸ்.ஆர்.எம். ஆசாத், செயலமர்வின் நோக்கம் பற்றிய தெளிவுகளை பயிலுநர்களுக்கு வழங்கினார்.

ரபீக் அங்கு கருத்துத் தெரிவிக்கையில், தமது பதவிக் காலத்தில் விளையாட்டுத் துறையில் இவ்வாறான வாய்ப்புக்களை உருவாக்கித் தருவதன் மூலம் பயிலுநர்களை உன்னத நிலைக்கு கொண்டு செல்வதற்காக தாம் திடசங்கற்பம் பூண்டுள்ளதாகத் தெரிவித்ததோடு பயிலுனர்களுக்கு பயன்மிக்க வழிகாட்டல்களையும் வழங்கினார்.

பெறுமதிமிக்க இச்செயலமர்வில் தூரப்பிரதேசங்களிலிருந்தும் சிலர் வருகை தந்திருந்தனர்.

ட சம்மேளனத்தின் பொருளாளரும், சர்வதேச கால்பந்தாட்ட மத்தியஸ்தரும், நகர சபையின் சிரேஷ்ட உத்தியோகத்தருமான எம். எஸ். ஜிப்ரி இதற்கான பாட வகுப்புக்களை வழிநடாத்தவுள்ளார்.



### யெஸ்டூ மின்னொளி கிரிக்கெட் தொடர்:

## சம்பியனான கோல்ட் ஸ்டார்

எம்.என்.எம். அப்ராஸ்

யெஸ்டூ அமைப்பின் ஏற்பாட்டில் 2005 சாதாரண தர நண்பர்களிடையே நடாத்தப்பட்ட சிநேகபூர்வ கிரிக்கெட் தொடரில் கோல்ட் ஸ்டார் அணி சம்பியனானது.

ஆரையம்பதி விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் மூன் பயர் அணியை வென்றே கோல்ட் ஸ்டார் சம்பியனானது.


இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மூன் பயர், எட்டு ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 57 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு 58 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கோல்ட் ஸ்டார், நான்கு ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரராக ஏ.என்.எம். நப்றிஸூம், சிறந்த பந்துவீச்சாளராக எம்.எச்.எம். நிஸ்பரும் தெரிவாகினர்.

அணிக்குப் 11 பேர் கொண்ட இத்தொடரில் சண் ஷைன் என்ற மூன்றாவது அணியும் பங்குபற்றியிருந்தது.

# யாழ்ப்பாணத்தில் SLT–MOBITEL இன் இணைக்கும் வசந்தம்

யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சேர்ந்த மக்களுக்கு புதிதாக அதிவேக இணைய இணைப்புகளையும், PEO தொலைக்காட்சி இணைப்புகளையும் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும், ஏற்கனவே காணப்படும் தமது இணைப்புகளை மெருகேற்றிக் கொள்வதற்கான வாய்ப்பையும் வழங்க இலங்கையின் தேசிய தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் SLT-Mobitel முன்வந்துள்ளது. இதற்காக யாழ்ப்பாணத்திலுள்ள SLT-MOBITEL பிராந்திய அலுவலகத்துக்கு அருகாமையில் "இணைக்கும் வசந்தம்" எனும் தொனிப் பொருளில் விசேட ஊக்குவிப்பு நிகழ்வை ஒக்டோபர் 3 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை முன்னெடுக்கின்றது.



வட பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு நவீன தொழில்நுட்ப வசதியின் உச்ச பயனைப் பெற்றுக்கொடுக்கும் வகையிலும், தமது அன்புக்குரியவர்களுடன் இலகுவாக தொடர்பை ஏற்படுத்தி இணைப்பில் இருப்பதற்கும், உடனுக்குடன் இணையத்தில் தகவல்களை அறிந்து கொள்ளவும், தமக்கு பிடித்த வீடியோக்களை பார்வையிட்டு மகிழவும், தடங்கலில்லாத இணைய வசதிகளை இலகுவான முறையில் பெற்றுக் கொடுப்பதற்காகவும், சிறந்த தொலைக்காட்சி நாளிகை பார்வையிடல் அனுபவத்தைப் பெற்றுக் கொடுக்கும் வகையிலும் இந்தத் திட்டத்தை SLT-MOBITEL ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் புதிய இணைப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு பல வெகுமதிகளை வழங்க SLT-MOBITEL முன்வந்துள்ளது. SLT-MOBITEL Fibre இணைப்புகளைப் பெற்றுக் கொள்ளும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக 100 GB வசதியும், 25 GB YouTube வசதியும் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் SLT-MOBITEL இன் தவிசாளர் றொஹான் பெர்னான்டோ, குழும பிரதம நிறைவேற்று அதிகாரி லலித் செனெவிரட்ன, SLT பிரதம நிறைவேற்று அதிகாரி ஜனக அபேசிங்க, மொபிடெல் பிரதம நிறைவேற்று அதிகாரி சந்திக விதாரென மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தைச் சேர்ந்த பலரும் கலந்து கொள்கின்றனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 06 ஒக்டோபர் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.